பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை 24 | புதன்கிழமை (07.05.2003) | தொலைபேசி ~ 2223378 | ஒலி 139

## அரசு யுத்தத்தைத் தொடராது

# இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கு

# இந்தியப் படையின் உதவி பெறப்படும்

## பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் உரை

### சதீஸ் நம்பியாரும் அறிக்கையுடன் வந்து சேர்ந்தார்

(நமது பாராளுமன்ற நிருபர்)

**அரசு விடுதலைப்புலிகளுடன் மேற்கொண்டுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலம் இலங்கையின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் கடற்பரப்பு மோதல்கள், உயர் பாதுகாப்பு வலய மீள் நிர்ணயம், இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளை இந்திய நிபுணர்களிடம் இருந்து அரசாங்கம் பெறவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

சமாதானப் பேச்சுவார்த்தையைத் தற்காலிகமாக இடைநிறுத்துவது தொடர்பாக விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தனக்கு அனுப்பி வைத்த கடிதத்தையும், அதற்கு தான் அனுப்பிய பதில் கடிதத்தையும் பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

அங்கு பிரதமர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை காண்பதற்கு விடுதலைப்புலிகள் தம்மை அர்ப்பணித்துள்ளமை அன்ரன் பாலசிங்கத்தின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை புலிகள் தற்காலிகமாகவே இடைநிறுத்தியுள்ளனர்.

அண்மையில் இலங்கை கடற்பரப்பில் இடம்பெற்ற மோதல்கள் அரசிற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே சிக்கல்களை ஏற்படுத்தி இருந்தமை உண்மையே. இச்சிக்கல்களை போக்குவதற்கு யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு நடவடிக்கை எடுத்து வருகிறது. அத்துடன் இச்சிக்கலான பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு இந்தியாவின் முன்னாள் பிரதிக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பி.ஜே. ஜேக்கப் விரைவில் இலங்கை வரவுள்ளார். அத்துடன் ஓய்வு பெற்ற இந்திய கடற்படைத் தளபதி லெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியார்

(10ம் பக்கம் பார்க்க)



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட மாலைதீவு ஜனாதிபதி முகமட் அப்துல் கையூம் விருந்தினர் புத்தகத்தில் கையொப்பமிடுவதையும் அருகில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெரனாண்டோவும் நிற்பதை படத்தில் காணலாம்.

# ஜப்பான் தூதுவர் அகாஷி இன்று பிரபாவைச் சந்திப்பார்

(கிளிநொச்சி)

ஜப்பான் சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷி, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை இன்று வன்னியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை சந்திக்கும் பொருட்டு கொழும்பில் இருந்து விசேட உலங்குவானூர்தி மூலம் இன்று காலை வன்னிக்கு வரும் யசூசி அகாஷியுடன் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் சிசரோ ஒட்சுனா, ஜப்பானிய வெளியுறவு அமைச்சின் தென்மேற்கு ஆசிய விவகாரங்களுக்கான அதிகாரிகளும் வரவுள்ளனர்.

இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை யசூசி அகாஷி குழுவினர் ஜப்பானின் ''அம்டா'' அமைப்பு வன்னியில் மேற்கொள்ளவுள்ள நடமாடும் மருத்துவ சேவையையும், கிளிநொச்சி வைத்தியசாலையின் அமைவிடத்தையும் பார்வையிடவுள்ளனர். (வ)

## தலைவர் பிரபாவுடன் நாளை தூதுவர் எரிக்சோல் சந்திப்பு

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் நாளை வியாழக்கிழமை விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனையும், ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தையும் கிளிநொச்சியில் சந்தித்துப் பேசவுள்ளார்.

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பது தொடர்பாகவும் டோக்கியோ நிதியுதவி மாநாட்டிற்கு முன்னதாக பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான வழிவகைகளை காண்பது தொடர்பாகவும் இப் பேச்சுவார்த்தையில் ஆராயப்படவுள்ளது.

இச்சந்திப்பில் இலங்கைக்கான முன்னாள் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கும் கலந்து கொள்ளவுள்ளார்.

இதேவேளை இன்றைய தினம் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் வவுனியா, மன்னார் ஆகிய இடங்களிற்கு செல்லவுள்ளனர். (த)

## தூதுவர் எரிக். சோல்ஹெய்ம் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

### உயர் பாதுகாப்பு வலயங்களையும் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் நேற்று யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்து குடாநாட்டின் நிலைமைகள் குறித்து விரிவாக ஆராய்ந்து சென்றுள்ளார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வருகை தந்த அவர் உயர்பாதுகாப்பு வலயங்களைச் சென்று பார்வையிட்டார். இதன் பின்னர் காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குச் சென்ற எரிக் சோல்ஹெயம் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஒலே புருண்டம் மற்றும் கண்காணிப்புக் குழு அதிகாரிகளுடன் குடாநாட்டு நிலைமைகள் குறித்து விரிவாக கேட்டறிந்தார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பின்னர் குடாநாட்டு மக்களின் மனங்களில் ஏற்பட்ட மாற்றம் குறித்தும், தற்போது நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் உயர் பாதுகாப்பு வலய விவகாரத்தில் பொது மக்களின் நிலைப்பாடு பற்றியும் அவர் விலாவாரியாக அதிகாரியிடம் கேட்டு அறிந்தார்.

இன்றைய தினம் வவுனியா, மன்னார் ஆகிய இடங்களிற்கும் அவர் செல்லவுள்ளார். நேற்றைய தினம் எரிக்சோல்ஹெய்முடன் நோர்வேத்

(10ம் பக்கம் பார்க்க)

## சீநோர் இறங்குதுறையை புனரமைக்க தடையில்லை

### பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

குருநகர் சீநோர் இறங்குதுறையிலுள்ள ஐஸ் தொழிற்சாலையை புனரமைப்பதற்கு எந்தவித தடைகளும் இல்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ அறிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் மேற்படி தொழிற்சாலையை புனரமைப்பதற்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டு புனரமைப்பு வேலைகள் ஆரம்பமானபோது படையினரால் புனரமைப்பு வேலைகள் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

புனரமைப்பு வேலை நிறுத்தப்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஊர்காவற்றுறை சிவன்கோவில்

# 'கணபதீஸ்வரம்'

## நவகுண்டபக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா

## மஹா கும்பாபிஷேகச் சிறப்பிதழ் 07-05-2003



### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

'சிவபூமி' எனப் போற்றப்படுகின்ற ஈழத்தில் சிவாலயங்களின் மகிமை அற்புதமானது. ஈழத்தமிழர்களின் வரலாற்றுப் பெருமைகளையும், நாகரிகச் சிறப்புக்களையும் வெளிப்படுத்துவதில் ஈழத்துச் சிவாலயங்கள் கணிசமான பங்கை ஆற்றி வருகின்றன.


அவ்வகையில் சைவத் தமிழ்ப் பண்பாட்டின் விழுமியங்களை மிகச் சிறப்பாக கடைப்பிடித்தொழுகும் தீவகத்தின் காவற் பட்டினமாக விளங்கும் ஊர்காவற்றுறையில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் அருள்மிகு கணபதீஸ்வரம சிவன் கோவில் தீவகம் வாழ் மக்கள் சிவவழிபாட்டில் கொண்டுள்ள ஆழ்ந்த பற்றுறுதியைக் காட்டி நிற்கின்றது.

அவ்வகையில் கணபதீஸ்வரம் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது எமக்கெல்லாம் பேரின்பத்தைத் தருகிறது. ஆலயகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருளை வேண்டுகின்றேன்.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

நல்லை ஆதீனம்,
நல்லூர்.

ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர
பரமாசாரிய சுவாமிகள்
ஆதீன முதல்வர்.



**ஆலயத்தின் அழகுமிகு தோற்றம்**

"காத லாகிக் கசிந்து கண் ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே."



### இந்து கலாசார அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

ஊர்காவற்றுறை சிவன் கோவிலின் பஞ்சகுண்டபக்ஷ புனராவர்த்தன பிரதஷ்ட மஹாகும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதை அறிந்து மிகவும் மன மகிழ்வு அடைகின்றேன். எல்லாம்வல்ல எம்பெருமான் காசி விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதசுவாமிகளாய் இங்கு வீற்றிருந்து அருளாட்சி புரிவது இங்கு மிகவும் குறிப்பிட்டுக் கூறவேண்டியதொன்றாகும். பணம் மற்றும் பொருளாதார வசதி குறைந்த மக்கள் தமிழகம் சென்று ஆலயதரிசனங்களை மேற்கொள்வது என்பது நடைமுறைச் சாத்தியமற்றதாகும். இந்த நிலையில் ஊர்காற்றுறை கணபதீஸ்வரத்தில் எழுந்தருளயுள்ள காசி விஸ்வநாதப் பெருமானை வழிபடும் போது எம்பெருமானின் அருளைப்பெற்றுக் கொள்ளும் பாக்கியம் எமக்குக் கிடைக்கின்றது. பலவருட இடைவெளியின் பின்னர் இந்து ஆலயத்தில் இடம் பெறும் மஹாகும்பாபிஷேகம் சிறப்புற பிரார்த்திப்பதோடு இரண்டாவது உலக இந்து மாநாட்டுக் காலத்தில் எல்லாம் வல்ல சிவபெருமானுக்கு கும்பாபிஷேகம் இடம்பெறுவதும் அதனை நாம் காணக் கிடைத்திருப்பது பெரும் தவப்பேறு என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

கௌரவ தி. மகேஸ்வரன் பா. அமைச்சர்
இந்துசமயவிவகார அலுவல்கள் அமைச்சு.
யாழ்ப்பாணம்

### கும்பாபிஷேக பிரதம குருவின் அருளாசியுரை

வரலாற்றுப் பிரசித்தி பெற்றதும், தீவகப்பிரதேசத்தின் முக்கிய சிவன் ஆலயங்களில் ஒன்றானதுமான ஊர்காவற்றுறை கணபதீஸ்வரம் சிவன் கோவிலின் மஹாகும்பாபிஷேகத்தை நடத்திவைப்பதில் நான் அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

யுத்த சூழலால் அலைந்து திரிந்த இந்தப் பிரதேச மக்கள் தற்போது மீளக் குடியமர்ந்து, தமது இயல்பு வாழ்வை ஆரம்பித்திருக்கும் வேளையில் எல்லாம் வல்ல எம்பெருமானுக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் இடம்பெறுவது இந்தப் பிரதேசத்தின் அமைதியான வாழ்வுக்கும், தமிழர்களின் குறிப்பாக இந்துமக்களின் நீண்டகால வேணவாவுக்குப் விடை பகருவதாய் அமைந்துள்ளது. எல்லாம்வல்ல எம்பெருமானின் இறையருள் எல்லோருக்கும் கிடைக்க இந்நாளில் பிரார்த்திக்கின்றேன்.

பிரதிஷ்டா பிரதம குரு
சிவாகமஞானபானு
நயினை சிவஸ்ரீ சுவாமி நாதபரமேஸ்வர
குருக்கள்.

### ஆலய வரலாறு

சைவமும், தமிழும் வளர்ச்சியுற்ற பரந்த பெருநிலப்பரப்பான தீவகப்பிரதேசத்தில் மணி முடிபோல் அமைந்திருப்பது ஊர்காவற்றுறைப் பிரதேசம். இந்தப் பெருநிலப்பரப்பின் மையப் பகுதியில், இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சைவப் பாரம்பரியத்தை அழிந்து போகாமல் நிலை நிறுத்தற் பொருட்டு சிவஸ்ரீ பொ.கணபதி ஐயர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயமே "கணபதஸ்வரம" எனச் சுருக்கமாக குறிப்பிடப்படும் ஊர்கர்வற்றுறைச் சிவன்கோவில். கிறிஸ்தவ சமயத்தின் பரம்பலும், ஆதிக்கமும் அதிகரித்திருந்தவேளையில் அத்தகைய சூழலின் மத்தியில் சைவசமயத்தின் நிலைக்களனாகக் கட்டியெழுப்பப்பட்ட ஆலயமே கணபதீஸ்வரம். சிவஸ்ரீ கணபதிஐயரின் பின்னர் அவருடைய சகோதரரின் மகன் சிவஸ்ரீ சாம்பசிவக்குருக்களும், அவர்களுக்குப் பின்னர் சிவஸ்ரீ சாம்பசிவக்குருக்களின் மைத்துனரான சிவஸ்ரீ ஜெயராமக் குருக்களாலும் இந்த ஆலயம் பரிபாலிக்கப்பட்டு வந்தது. தற்போது சிவஸ்ரீ ஜெயராமக் குருக்களின் மகன் சிவஸ்ரீ சந்திரகாந்தக் குருக்கள் ஆலயத்தைப் பரிபாலித்து வருகின்றார்.

1990ஆம் ஆண்டு இடம்பெற்ற தீவக இடப் பெயர்வின்போது ஊர்காவற்றுறைப் பகுதி மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்த நிலையிலும் ஆதீனகர்த்தா கணபதி ஐயரின் மனைவியும், சாம்பசிவக்குருக்களும், ஜெயராம் குருக்களின் மனைவியும் ஆலயத்திலேயே தங்கியிருந்தனர். இராணுவச் சூழலில தனித்திருந்து ஆலயத்தின் பூஜைகளை முறைப்படி நடத்திவந்த பெருமை இவர்களுக்கு உண்டு.

1992 இல் சிவஸ்ரீ சாம்பவசிவக் குருக்களும், 1995இல் ஜானகி அம்மாவும் ஆலயச்சூழலில் இறைபதம் எய்தினர். 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் ஆலயம் பலத்த சேதம் அடைந்தது. பின்னர் 1998 இல் வடக்கின் மீள் குடியமர்வு அதிகார சபையின் நிதியுதவியினாலும், பொதுமக்களின் நிதியுதவி யினாலும் புனரமைக்கப்பட்ட ஆலயம் இன்று மஹா கும்பாபிஷேகம் காண்கின்றது.

### பிரார்த்தனையுரை

கணபதீஸ்வரத்தில் இன்று மஹாகும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது. ஊர்காவற்றுறைப் பிரதேச மககள் இதுவரைகாலமும் அனுபவித்து வந்த பல்வேறு வகையான இன்னல்களுக்கும் கணபதீஸ்வரத்தில் எழுந்தருளியிருக்கும் காசி விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதசுவாமிகளின் பெருங்கருணையால் படிப்படியாக விடிவு ஏற்பட்டு வருகின்றது. இந்த ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதன் மூலம் இந்த ஊரும், அதனை அண்டி வாழும் மக்களும் நிம்மதியுடன் கூடிய வாழ்வைப் பெற்று, செல்வந்தர்களாகவும் கொடைவள்ளல்களாகவும் தொடர்ந்தும் விளங்குவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்தவேளையில் ஆலய [illegible]மைப்புக்கு உதவிகள் செய்த அனைத்து அன்பர்களையும் நான் நினைவு கூர்ந்து மனமார்ந்த ஆசிகளைத தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவஸ்ரீ ஜெ.சந்திரகாந்தக் குருக்கள்
தேவஸ்தானம்
ஊர்காவற்றுறை

### ஈழத்தின் மணிமுடியில் மகா கும்பாபிஷேகம்

கணபதீஸ்வரம் என எல்லோராலும் அழைக்கப்படும் ஈழத்து பழமையான ஆலயங்களில் ஒன்றான ஊர்காவற்றுறை சிவன்கோவில் கும்பாபிஷேகம் நீண்ட கால இடைவெளிக்குப் பின் நடைபெறுவது பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அளிக்கின்றது.

"சிவபூமி"என அழைக்கப்படும் ஈழத்திற்கு மணி முடியாக அமைவது தீவகம். தீவகத்தின் தலை நகரம் பழம்பெரும் துறைமுகப்பட்டினமான ஊர்காவற்றுறை. இந்நகரம் அந்நியர் ஆட்சியாலும் அந்நிய பாதங்களாலும் அசிங்கமான கலாசாரத்தினாலும் ஸ்ரீலங்கா இராணுவ அடக்கு முறையாலும் ஆக்கிரமிக்கப்பட்ட நகரமாக தனது அனைதது செழிப்பையும் கடந்த காலங்களில் இழந்து வந்துள்ளது. இது ஈழம்வாழ் சிவபக்தர்கட்கு மட்டுமல்ல. தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பெரும் குறையாக, தீராத கவலையாக இருந்து வந்துள்ளது. இவ்வளவு நெருக்கடிகளுக்கும் அடக்கு முறைகட்கும், துன்ப துயரங்கள், கலாசார சீரழிவுகளிலிருந்தும் மீண்டு, புதுப் பொலிவுகாண ஊர்காவற்றுறை பிரதேசம் எழுச்சி பெற்றுவிட்டது என்பதை எடுத்துக் கூறும் விழாதான் இன்று சிவனுக்கு நடக்கும் மகா குடமுழுக்கு விழா. இது அனைத்து தமிழ் மக்களுக்கும் மகிழ்ச்சியானதாக அமைகிறது. இந்த எழுச்சியை இனி யாராலும் தடுக்க முடியாது. சிவனின் அருளாட்சி மேலோங்கட்டும். பழம் பெரும் நகரம் தனது பழைய நிலையை அடையட்டும். மக்கள் எல்லாம் இன்புற்று வாழட்டும் என வாழ்த்தி அமைகின்றேன்.

ஊர்காவற்றுறை
[illegible]
உதவி அரசாங்க அதிபர்

### பெரும்பேறு தரும் திருக்குடமுழுக்கு

ஊர்காவற்றுறைப் பட்டினம் ஈழத்து வரலாற்றில் முக்கியமான ஓர் பிரதேசமாகக் காணப்படுகிறது. நிலவளமும், கடல்வளமும் ஒருங்கே அமைந்த இப்பிரதேசம் அந்நியர் ஆட்சிக் காலத்திலும் பெரும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. அத்தகைய பெருமைக்குரிய இப்பிரதேசத்தில் கணபதீஸ்வரம் என்ற வரலாற்றுப் பெருமை மிக்க சிவத்தலம் இருப்பது ஈழத்தில் பரந்து விரிந்து காணப்படும் சைவத்தின் தொன்மைக்கு ஆதாரமாகும்.

அத்தகைய பெருமைமிக்க சிவத்தலத்தில் இன்று மகாகும்பாபிஷேகம் இடம் பெறுவதும், அதை நாம் கண்டுகளிப்பதும் பெரும்பேறாகும். அந்த அற்புதமான திருக்குடமுழுக்கு இனிதே நடைபெற தூக்கிய திருவடியான் பாதம் வணங்குகின்றேன்.

காயத்திரிபீடம் சிவஸ்ரீ
தா.மகாதேவாக்குருக்கள்
இணுவில்.

விளம்பர அனுசரணை: **பெட்டா எசன்ஸ் யாழ். கிளை**
**யாழ்ப்பாணம்**

**உதவி அரசாங்க அதிபர் பணிமனை**
தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை

### புதிய இடத்தில் இராணுவ முகாம் அமைப்பதானது

# எதையும் தமிழ் மக்கள் மீது திணிக்கும் அரசின் மனப்போக்கைக் காட்டுகிறது

### தமிழர் ஆசிரியர் சங்கம் பிரதமருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

பொது மக்கள் அபிப்பிராயத்துக்கும், நலன்களுக்கும் மதிப்புக் கொடுக்காமல் யாழ்ப்பாண நகரின் மையப் பகுதியில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இடத்தில் இராணுவ முகாம் அமைக்க அரசு எடுத்து வரும் முயற்சியானது தமிழ் மக்கள் மீது எதனையும் எந்த நேரத்திலும் திணித்து விடலாம் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டையே எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட உதவிப் பொதுச் செயலாளர் ரி.பஞ்சலிங்கத்தால் கையெழுத்திடப்பட்டு அனுப்பப்பட்டுள்ள அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் பழைய கோட்டையை அண்டிய பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்படுவதை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கின்றோம். யாழ்ப்பாணத்தின் சாதாரண பொது மக்களைப் பொறுத்தவரை இராணுவ முகாம் அமைப்பதற்கு முன்பு தெரிவு செய்யப்பட்ட இடத்திற்கும் இப்புதிய இடத்திற்கும் எதுவித வித்தியாசமும் இல்லை. நகரின் மையப்பகுதியில இராணுவ முகாம் அமைக்கப்படுவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அப்படியான இராணுவ முகாம் இப்பகுதியில் அமைதிக்கு எப்பொழுதுமே ஆபத்தாகவே இருந்து வரப்போகின்றது.

நகரின் மையப் பகுதியில் இராணுவ முகாம் அமைவதில் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்பதை சுட்டிக்காட்டுவதற்காக 1974ஆம் ஆண்டு இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டின் போது நிகழ்ந்த சம்பவங்களையும் அப்போது 10 அப்பாவித் தமிழ்மக்கள் கொலையுண்டதையும் சுட்டிக்காட்டியுள்ள சங்கம்,

1981ஆம் ஆண்டு யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்டதையும் எடுத்துக்காட்டியுள்ளது.

எனவே மக்கள் தற்போது குடியிருக்கும் பகுதிகளுக்கும் இனி மேல் குடியிருக்கப் போகும் இடங்களுக்கும் அப்பால் யாழ். நகருக்கு தூரமான இடத்தில் இராணுவ முகாம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழர் ஆசிரியர் சங்கம் பிரதமரைக் கேட்டுக் கொண்டுள்ளது. (பி)

## இயல்பு நிலை ஏற்பட இயன்றவரை குரல் கொடுப்போம்

### மாவை எம்.பி. உரை

(யாழ்ப்பாணம்)

கோட்டைப் பகுதியில் முகாம் அமைப்பதால் ஏற்படவிருக்கும் மக்கள் கிளர்ச்சிகளுக்கு அரசாங்கமே காரணமாகும் என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

கோட்டைப் பகுதியில் முகாம் அமைப்பதைக் கண்டித்து நேற்று முன்தினம் அந்த இடத்தில் இடம் பெற்ற மக்கள் மறியல் போராட்ட முடிவில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் இவ்விதம் குறிப்பிட்ட மாவை மேலும் கூறுகையில்,

தற்போதைய அமைதி நிலை தொடர்ந்து நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்பட இராணுவத்தினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அவர்கள் மேன் மேலும் முகாம்களை அமைப்பது அமைதி நிலைக்குக் குந்தகமாகவே அமையும்.

தவிரவும்,

இவ்வாறானதோர் நிலைமையைப் பார்த்து மக்கள் பிரதிநிதிகளாகிய எம்மால் வாளாவிருக்க முடியாது என்றார். (உ-4)

## திருகோணமலை மாவட்டத்தில் தீய சக்திகள் விஷமப் பிரசாரம்

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர் கிராமத்தில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற வேண்டும் என வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன.

சில தீய சக்திகள் இத்தகைய செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாகவும் இதற்கும் தமக்கும் இடையில் எதுவித தொடர்பும் இல்லை என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

சமாதான நடவடிக்கைகளை குழப்பி இனங்களுக்கு இடையில் மோதலை தோற்றுவிக்க முனையும் இவ்வாறான தீய சக்திகள் தொடர்பாக மக்களை விழிப்பாக இருக்குமாறு அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (உ-3)

### முகாம் அமைப்பைக் கண்டித்து

# மனிதநேய அமைப்புகள் பிரதமருக்குக் கடிதம்

(தென்மராட்சி)

வரலாற்றினை மாற்ற முடியாது. ஆனால் வரலாற்றில் இருந்து பாடங்களைப் படிப்பதன் மூலம் தவறுகள் இழைக்கப்படாமல் பார்த்துக் கொள்ள முடியும்.

அந்த வகையில் கோட்டையின் மேற்குப் பகுதியில் புதிய படைத் தளம் அமைக்கும் முயற்சியை நிறுத்த உரிய உத்தரவினை வழங்கும் படி யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புகளின் ஒன்றியம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று முன்தினம் போர் நிறுத்தக்கண் காணிப்புக் குழு மூலம் அனுப்பி வைத்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மு.ப 10 மணியளவில் மனிதநேய அமைப்புகளின் தலைவர் எஸ்.பரமநாதன், செயலாளர் எம்.தருமரத்தினம், சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் ஆசிரியர் த.பஞ்சலிங்கம் ஆகியோர் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் மேற்படி மகஜரைக் கையளித்தனர்.

அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் மூலம் இலங்கைப் பொலிஸாரின் அட்டகாசம் காரணமாக 11 பேர் கொல்லப்பட்டனர்.

அத்துடன்,1981 ஆம் ஆண்டில் யாழ். பொதுநூலகம் எரிக்கப்பட்ட சம்பவத்தினை அடிப்படையாகக் கொண்டு கோட்டைப் பகுதியில் புதிய படைத்தளம் அமைக்கப்பட முயற்சிப்பது குறித்து தமிழ் மக்கள் மத்தியில் பயவுணர்வு மேலோங்கியுள்ளது.

தற்போது புதிய படைத் தளம் அமைக்கத் தெரிவு செய்யப் பட்ட இடத்தில் மார்புநோய் சிகிச்சை நிலையம் அமைக்கப்படவுள்ளதுடன், நவீன சிறுவர் வைத்திய சாலையும் அமைக்கப்படவுள்ளது.

அத்துடன், இங்கு புதிய படைத் தளம் அமைக்கப்படும் பட்சத்தில் இப்பகுதியில் வாழ்கின்ற குடும்பங்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படக் கூடிய ஏது நிலை காணப்படுகின்றன.

எனவே, தமிழ் மக்களின் வாழ்வில் அக்கறையும் ஆர்வமும் கொண்டுள்ள தாங்கள் உடனடியாகத் தலையிட்டுத் தடுத்து நிறுத்தும் படி 52 மனித நேய அமைப்புகளின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம் என அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, நோர்வே தூதுவர், தமிழீழ விடுதலைப் புலிகள், அரசாங்க அதிபர், மற்றும் பலாலியிலுள்ள படைத்தளபதி சரத் பொன் சேகாவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கதாகும். (உ-77)

### கோட்டையில் முகாம் அமைப்பை எதிர்த்து

# தொடர் போராட்டங்களை நடத்த தீவிரமாக ஆராய்ந்து வருகிறோம்

### பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டையின் மேற்குப் புறமாக புதிய முகாம் அமைக்கப் படுவதைக் கண்டித்து நேற்று முன்தினம் இடம்பெற்ற மறியல் போராட்ட முடிவில் யாழ். அரச அதிபருடாக யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்ண்ணனடோவுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்தது.

அக்கடிதத்தின் விபரம் வருமாறு,

சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகள் அமைப்பிற்கும் இடையே கடந்த ஆண்டில் கைச்சாத்தான புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிநாதமாகவுள்ள போர் நிறுத்தம் மற்றும் இயல்பு வாழ்க்கை என்பன மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

உடன்பாட்டின் படி மக்கள் வாழ்விடங்களில் இருந்து இராணுவ முகாம்கள் காவலரண்கள் என்பன குறிப்பிட்ட காலவரையறைக்குள் அகற்றப்படாதிருப்பதை நாம் காண்கிறோம். அதேவேளை, இவ் உடன்பாட்டை மீறும் வகையில், யாழ்.கோட்டைப் பகுதியில் புதிய இராணுவ முகாமொன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு முரணான வகையில் யாழ்ப்பாண மக்களின் இயல்பு வாழ்வுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய வகையில் இப்புதிய படைமுகாம் அமைவதை யாழ்ப்பாணம், மற்றும் தீவக மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. இது குறித்து யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புகள், அரசியற்கட்சிகள் என்பன தங்கள் எதிர்ப்பைக் காட்டியுள்ளன. பல அமைப்புக்கள் தங்கள் தொடர் போராட்டங்களை நடாத்த தீவிரமாக ஆராய்ந்து வருகின்றன.

ஆதலால், யாழ்.கோட்டைப் பகுதியில் எங்குமே புதிய இராணுவ முகாம்,காவலரண்கள் என்பன அமைக்கப்படுவதை நிறுத்தி வைக்குமாறு வேண்டுகிறோம். நிறுத்த வேண்டுமென்பதற்குரிய காரணங்களை கீழே தருகின்றோம்.

* அனைத்து தீவக மக்களின் நுழைவாயிலில் இப்படை முகாம் அமைவதால் என்றுமே தீவக மக்களின் இயல்பு வாழ்வு நிலைக்கு அச்சுறுத்தலாகும்.

* எதிர்கால யாழ்.மாநகரத்தினை நவீனமயப்படுத்தும் திட்ட அமைவிடங்கள் கோட்டைப் பகுதியை அண்டிய பகுதிகளில் உள்ளன. இப்புதிய படைமுகாம் அமைவதால் இத்திட்டங்கள் சீர்குலைந்து விடும் ஆபத்துண்டு.

* ஏற்கனவே சிறப்பாக செயற்பட்டு வந்த பண்ணை மார்பு நோய் மருத்துவமனையின் சேவைகள் முற்றாக பாதிக்கப்படும்.

* பெருவிழாக்கள்,பெரும் கூட்டங்கள் நடாத்துவதற்குரிய வரலாற்றுப் பெருமைக்குரிய யாழ்முற்றவெளி மைதானமும் தன் சோவை இழந்த மக்கள் பயன்படாதவாறு தடுக்கப்படும்.

* புனரமைக்கப்பட்டு வரும் யாழ். பொது நூலகம் மக்களால், மாணவர்களால், கல்வியாளர்களால், கல்வித் தேடலுக்கு முகம் கொடுக்க முடியாமல் அமைதி இழந்து இராணுவ அச்சுறுத்தலுக்குள்ளாகும்.

* மீன் சந்தை, ஏனைய சந்தைகள், கோட்டைப் பகுதியின் வீதியில் அமைந்துள்ளன. சந்தை வாய்ப்பை தேடிவரும் உற்பத்தியாளருக்கு இது பெரும் தீங்காக அமையும்.

* யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை, யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கட்டடம் போன்றவற்றில் அரச திணைக்களங்கள் இயங்குகின்றன. இப்பகுதிக்கு தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வருகிறார்கள். இப்படை முகாம் அமைவது அத்தியாவசிய கடமைக்கு பெரும் அச்சுறுத்தலாகும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். அரசுக்கும், புலிகளுக்கும் இடையே பேச்சு வார்த்தை தொடர்ந்து நிரந்தரமான சமாதானம், நிரந்தர அரசியல் தீர்வு ஏற்பட்டு இயல்பு வாழ்வுநிலை தோன்றிட வேண்டுமானால் புரிந்துணர்வு அமுல்படுத்தப்பட வேண்டும்.

ஆதலால் அனைத்து எதிர்ப்புக்களுக்கும் தடையாக இருக்கும் புதிய இராணுவ முகாம் அமைப்பது காவலரண்கள் அமைப்பதை நிறுத்துமாறு கோருகிறோம். எமது உணர்வலைகள் ஆயிரக்கணக்கான மக்கள் கோட்டைப்பகுதியில் கூடி நின்று எம் எதிர்ப்பைத் தெரிவிப்போம் என்பதை தங்கள் கவனத்திற்குத் தருகிறோம் என்றுள்ளது. (உ-4)

# கோட்டையில் முகாம் அமைப்பைக் கண்டித்து க.கா.குழுவுக்கு கடிதம்

### யாழ். பல்கலை ஊழியர்சங்கம் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

நகரின் மத்தியில் உள்ள இராணுவ முகாமை அகற்றி கோட்டைப் பகுதியில் மீள நிர்மாணிப்பதானது நகர மக்களைப் பொறுத்தவரை சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாகவே இருக்கும்.

இவ்வாறு இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவருக்கு யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும்,

புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிநாதம் போர்நிறுத்தமும், மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புதலுமாகும். இவை இரண்டும் சரிவர நிகழுவதாயின் இராணுவ நெருக்குவாரங்கள் அகற்றப்பட வேண்டும். ஆனால் தமிழர் வாழும் பகுதிகளில் இராணுவ அச்சுறுத்தல்கள் இன்னும் ஒழியவில்லை. மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறாக உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படவேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

யாழ். நகரின் மத்தியில் உள்ள இராணுவ முகாம் அகற்றப்படுவதனால் 2 ஹோட்டல்களும் 80 தனியார் வீடுகளும் பல வர்த்தக நிலையங்களும் அரச நிறுவனங்களும் பொது மக்களின் பாவனைக்காக விடுவிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. ஆனால் இம்முகாம்கள் நகரின் மற்றொரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைக்கப்படுவதானது நகர் முழுவதிலும் வாழும் பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு மிகுந்த அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாய் உள்ளது.

தயவு செய்து யாழ்.கோட்டைப் பகுதியில் நின்று தங்கள் கூப்பிடு தொலைவிலும், கண்ணுக்கெட்டிய தூரத்திலும் உள்ள புனர்நிர்மாணம் செய்யப்பட்ட நிலையிலும், இடிந்து அழிந்த நிலையிலும் உள்ள சுற்றுப் புறங்களை ஒரு முறை நோக்குங்கள். இச்சுற்றுப்புறங்களில் நகரமக்களுக்கு மட்டுமன்றி முழு யாழ்ப்பாண மக்களுக்குமே பயனளிக்கும் காரியங்கள் இடம்பெற்றுவந்தன.

மக்களின் நாளாந்த தேவைகளுக்கு மிக அவசியமான இப்பிரதேசத்தில் இராணுவம் குடிகொண்டபின் இங்கு மக்களின் இயல்பு வாழ்க்கை சாத்தியமாகுமென தாங்கள் கருதுகிறீர்களா? இங்குள்ள புனரமைக்கப்பட்ட கட்டடங்களை மீண்டும் சிதையவிடப் போகின்றோமா?

கோட்டையில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டால் யாது நடைபெறும் என்பது குறித்து எமக்கு பட்டறிவு உண்டு. 1985-1990 வரையான காலப்பகுதியில் நிலை கொண்ட இராணுவங்களால் எமது மக்கள் சந்தித்த அனர்த்தங்களை மறந்து விட முடியாது.

இந்த நிலையை மீளவும் தோற்றுவிக்கப் போகின்றோமா? நாம் தற்போது நிரந்தர சமாதானம் நோக்கிய திசையில் மெதுவாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம். மீளவும் மக்களின் இயல்பு வாழ்க்கை நிலையை ஏற்படுத்துவது இப்பயணத்தின் முன்னேற்றத்துக்கு மிகவும் அத்தியாவசியமானதாகும். கோட்டைப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டால் குடாநாடு முழுவதும் வாழும் மக்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிப்படையும்.எனவே தயவு செய்து தாங்கள் உடனடியாக தலையிட்டு இப்பகுதியில் இராணுவ முகாம் அமைக்கும் முயற்சியை தடுத்து நிறுத்துமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகிறோம் என்று குறிப்பிட்டுள்ளது. (உ)

## கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை

(சுண்டுக்குளி)

அகில இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனம் யாழ்-கரப்பந்தாட்ட சமாசத்தின் அனுசரணையுடன் கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையை முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் தமிழ்மொழியில் நடத்தியுள்ளது.

யாழ்.பரீட்சைத் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த 30 ஆம் திகதி முதல் தொடர்ந்து 4 நாட்கள் வரைநடைபெற்ற இப்பரீட்சையில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் இருந்து 61 பேர் கலந்து கொண்டனர். இவர்களில் மூவர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் நாள் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த 30 பரீட்சார்த்திகளும் பின்னர் செய்முறைப் பரீட்சைக்கும் வாய்மூலப் பரீட்சைக்கும் உட்படுத்தப்பட்டனர்.

இப்பரீட்சைக்கு யாழ். பரீட்சைத் திணைக்களத்தின் செயலக நிர்வாக உத்தியோகத்தர், நாகராசா, சமாசத் தலைவர் கப்ரின் டீ.ஏ.எம்.குணசிங்கம் ஆகியோர் கண்காணிப்பாளர்களாக கடமையாற்றியதுடன்,விளையாட்டுத் துறை அமைச்சின் அங்கீகாரம் பெற்ற சர்வதேச கரப்பந்தாட்ட நடுவர்களான விமல் அமரசிங்கா, பியந்த செனிவரட்ன மற்றும் அகில இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் பீ.பீ குணதிலக்கா ஆகியோரும் வருகைதந்திருந்தனர். (உ-110)

# மத்திய கிழக்கில் தற்போது பதற்றம் தணிந்துள்ளதென்கிறது அமெரிக்கா

## ஆனால் அமெரிக்கர்களுக்கு ஆபத்து நீங்கவில்லையாம்

(வாஷிங்டன்)

ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் பதவி கவிழ்க்கப்பட்டதன் பின்னர் மத்திய கிழக்கு நிலைமைகளில் பதற்றம் தணிந்திருப்பதாக அமெரிக்கா கூறுகின்றது.

தற்போது பதற்றம் குறைந்திருந்தாலும் ஈராக் அமெரிக்கர்களுக்குப் பாதுகாப்பான நாடல்ல என அமெரிக்க வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளைகுடாவில் அமெரிக்கர்கள் மீது பல்வேறு வழிகளில் பயங்கரவாத தாக்குதல் நடத்தப்படலாம் என அந்த அறிக்கையில் மேலும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

### மொசூலில் இடைக்கால நகரசபை

ஈராக்கின் மிகப்பெரிய நகரமான மொசூலில் இன மற்றும் மதக் குழுக்களின் பிரதிநிதிகள் ஒரு இடைக்கால நகரசபையையும் நகர தந்தை(மேயர்) ஒருவரையும் தேர்ந்தெடுத்துள்ளனர்.

அமெரிக்கத் துருப்புகள் பாதுகாப்பு வழங்க மொசூல் நகரில் அரபு, குர்து,துருக்கி மற்றும் கிறிஸ்தவ சமூகங்களின் பிரதிநிதிகள் 200 பேருக்கும் அதிகமானவர்கள் புதிய மேயரையும் அவருடைய உதவியாளர்களையும் மற்றும் 24 உறுப்பினர்களையும் கொண்ட நகரசபையினையும் தேர்ந்தெடுத்துள்ளனர்.

அமெரிக்கத் துருப்புக்களின் இராணுவ தளபதியான ஜெனரல் டேவிற் கற்னஸ் முன்னிலையில் நகர தலைமை நீதிபதி புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்துள்ளார்.

ஈராக்கின் ஜனநாயக வளர்ச்சியில் மொசூல் பங்கு பற்றியுள்ளதென அமெரிக்கத் தளபதி பிரதிநிதிகளிடையே கூறினார்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னாள் இராணுவத்தளபதி கமீம் அல் பொஸோ, மொசூல் நகரைக் கட்டுப்படுத்திவரும் அமெரிக்கப் படைகளுடன் தாங்கள் இணைந்து செயலாற்றுவோம் என்று உறுதியளித்துள்ளார்.

### உயிரியல் விஞ்ஞானி ஒருவர் கைது

சதாம் ஹுசைன் நிர்வாகத்தின் உயிரியல் ஆயுத உற்பத்தி துறையில் மிக முக்கிய பங்காற்றிய விஞ்ஞானிகளில் ஒருவரை தாங்கள் கைது செய்துள்ளதாக நேற்று முன்தினம் அமெரிக்கப் படைகள் அறிவித்துள்ளன.

கூர்ஹாஸ் பலேஅமாஸ் என்னும் 53 வயதுடைய இந்தப் பெண்மணி அமெரிக்காவினால் தேடப்பட்டு வந்த சதாம் ஹுசைனின் மிக முக்கியமான ஆட்களில் ஒருவர்.

அமெரிக்காவின் தலைமையிலே ஈராக் மீது தாக்குதல்கள் நடந்து கொண்டிருந்த சமயம் பக்தாத் நிர்வாகம் வெளியிட்டிருந்த வீடியோப் படத்தில் சதாம் ஹுசைனுடனும் அவர்களது மூத்த அதிகாரிகளுடனும் கூட இவர் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### நாடு திரும்ப முடியாமல் டுபாயில் தவிக்கும் ஈராக்கியர்கள்

ஈராக்கின் தென்பகுதியில் இருக்கின்ற உம்கஷீர் துறைமுகத்தை அமெரிக்க இராணுவத்தினர் மூடியிருப்பதனால் நூற்றுக் கணக்கான ஈராக்கியர்கள் நாடு திரும்ப முடியாமல் டுபாயில் நிர்க்கதியாகியிருக்கின்றனர்.

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் இருக்கின்ற ரஹிப் துறைமுகத்தில் நிர்க்கதியாகியிருக்கின்ற இவர்கள் அங்கு நிலவும் கடும் வெப்பம் காரணமாக பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும், அங்கு சிலருக்கு தற்காலிக இடம் கிடைத்துள்ள போதிலும் ஏனையோர் தற்காலிக கொட்டில்களில் பல சிரமங்களுக்கு மத்தியில் இருப்பதாக கூறப்படுகின்றது.

உல்லாசப் பயணிகளிற்கான விசாக்களைப் பெற்று டுபாய் சென்ற இவர்கள் விசா காலாவதியான நிலையில் கடல் வழியாகவோ அல்லது தரை வழியாகவோ நாடு திரும்ப முடியாத நிலையில் இருக்கின்றார்கள். (பி-9)

# வங்காள சூறாவழிக்கு 30 பேர் பலியானார்கள்

(டாக்கா)

வங்கதேசத்தின் கிழக்கே பிரம்மன் பாரியா மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வீசிய சூறாவளிக்கு 9 குழந்தைகள் உட்பட 30 பேர் இறந்தனர். மேலும் 100 பேர் காயமடைந்தனர்.

இந்த சூறாவழியால் 2 கிராமங்கள் தரைமட்டமாயின. இந்திய எல்லை அருகே இந்த கிராமங்கள் அமைந்துள்ளன. 100இக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. சூறாவழியுடன் கனமழை பெய்ததால் சில இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. மின்னல் தாக்கிய சம்பவத்தில் 6 பேர் இறந்தனர்.

### அமெரிக்காவில் 8பேர் பலி

அமெரிக்க மத்திய மாநிலங்களான கன்சாஸ் மற்றும் மிசூரி பகுதிகளில் வீசிய கடும் புயல் மற்றும் சுழல் காற்றினால் 20 இற்கும் அதிகமானோர் பலியாகியிருக்கலாமென அஞ்சப்படுகின்றது.

கன்காஸ் மாநிலத்தை கடந்த ஞாயிறன்று மதியம் 4 தடவைகள் தாக்கிய சுழல் காற்று பின்னர் அயல் மாநிலமான மிசூரியையும் தாக்கியது. நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் இப்பகுதியை தாக்கிய மிகப் பெரும் சுழல் காற்றாக இது கருதப்படுகின்றது. (பி-2)

# இத்தாலிய பிரதமர் மீது மோசடி வழக்கு

(ரோம்)


மோசடி வழக்கொன்றில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள இத்தாலிய பிரதமர் சேலியோ பேலிஸ் ஸ்கோரி நீதிமன்றம் ஒன்றில் நேற்று முன்தினம் ஆஜரானார்.

தமக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசியல் லாபத்தை நோக்காகக் கொண்டு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றிற்கு நீதிபதிகள் உடந்தையாக இருப்பதாகவும் இத்தாலியப் பிரதமர் கூறியிருக்கின்றார்.

1985 இல் கோடீஸ்வர வர்த்தகராக போலிஸ்கோரி இருந்த போது வர்த்தக உடன்படிக்கை ஒன்றில் ஈடுபட்டதன் காரணமாக அவருக்கு எதிராக மோசடிக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

உணவு வகைகள் விற்பனை செய்யவும் விநியோகம் செய்யவும் நீதிபதிகளின் அனுமதியைப் பெற லஞ்சம் கொடுத்தாகவும் இத்தாலியப் பிரதமருக்கும் மேலும் 4 பேருக்கும் எதிராக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இத்தாலியின் மிகவும் பிரசித்தி பெற்ற ஊடக நிறுவனம் ஒன்றை நடத்தி வரும் இத்தாலியப் பிரதமர் தனக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிராகரித்திருக்கின்றார். (பி-9)



ஈராக்கில் அமெரிக்கக் கூட்டுப்படையினர் தாக்குதல் முடித்து விட்ட நிலையில் தலைநகர் பக்தாத் அருகில் உள்ள நசாஃப் நகரில் நடை பெற்ற தொழுகையின் போது பல்லாயிரக் கணக்கான ஈராக்கியர்கள் கலந்து கொண்டனர்.

# சூரிய வட்டு பகுதியை புதன்கோள் கடந்து செல்லும் அபூர்வ காட்சி

## இன்று நடைபெறுகிறது

(கொல்கத்தா)

சூரிய வட்டு பகுதியை புதன் கிரகம் கடக்கும் அபூர்வ நிகழ்ச்சி இன்று புதன்கிழமை நடைபெறுகிறது.ஒரு நூற்றாண்டில் 13 முறை தான் இப்படிப்பட்ட அரிய நிகழ்ச்சி நடைபெறும் என்பதால் இக்காட்சியை பார்க்க விண்வெளி அறிஞர்கள் தயாராகி வருகின்றனர். ஆசியா முழுவதும் இதனைப் பார்க்கலாம். ஆனால் வெறும் கண்ணால் இதனைப் பார்க்கக் கூடாது என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

இப்பிரபஞ்ச சூரிய குடும்பத்தில் 9 கோள்கள் உள்ளன. அவை புதன்,வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்ட்யூன் என்பனவாகும். இந்த 9 கோள்களில் சூரியனுக்கு மிக அருகில் புதன்கோள் உள்ளது. சூரியனை நீள்வட்ட பாதையில் இந்த புதன் கோள் சுற்றி வருகிறது.

சூரியன் மறையும் போது அல்லது காலையில் சூரிய உதயத்தின் போது சூரியனுக்கு அருகில் புதன் கோள் தெரியும். சூரியனில் இருந்து சராசரியாக 5.8 கோடி கிலோ மீற்றர் தூரத்தில் புதன் கோளின் சுற்றுப்பாதை உள்ளது.

சூரியனுக்கு அருகே இருப்பதால் புதன் கோள் சூரியனை விரைவாக சுற்றி வருகிறது. சூரியனை ஒரு முறை சுற்றி வர புதன் கிரகத்திற்கு 88 நாட்கள் ஆகிறது. அதாவது புதன் கோளில் ஒரு ஆண்டு என்பது 88 நாட்கள் தான்.

சூரிய கிரகணம், சந்திர கிரகணம் போல சூரிய பாதையின் ஊடே கோள்கள் நகர்ந்து செல்வதை ''டிரான்சிட்'' என்று அழைக்கிறார்கள்.இது ஒரு அபூர்வ காட்சியாகும். அந்த வகையில் புதன் கோள் நகர்ந்து செல்லும் ''டிரான்சிட்'' எனப்படும் சூரியகாட்சி அதாவது புதன் கிரகணம் இன்று நடைபெறுகிறது.

பூமி சுற்றி வரும் பாதையின் தளத்திற்கு 7 டிகிரி சாய் கோணத்தில் புதன் சுற்றும் பாதை உள்ளது. இப்படி சாய்ந்து இருப்பதால் சூரியனின் வட்டு வழியே புதன்கோள் நகர்ந்து செல்வதை காண்பது என்பது மிகவும் அரிதாகும். சூரிய பாதையில் புதன் வரும் இந்த அபூர்வ நிகழ்ச்சி இந்திய நேரப்படி இன்று காலை 10.43 மணிக்கு தொடங்குகிறது. அப்போது புதன் கோள் சூரிய வட்டின் புறப்பகுதியை அதன் வடதுருவ பகுதி வழியாக கடந்து செல்லத் தொடங்கும்.

புதன்கோள் மெல்ல மெல்ல நகர்ந்து சூரியவட்டின் மேற்கு விளிம்பு வழியே மாலை 4.02 மணிக்கு வெளியேறுகிறது. இந்த சூரிய ''டிரான்சிட்'' நிகழ்ச்சி இந்தியாவில் மிக தெளிவாகத் தெரியும். சூரியனை புதன் கடக்கும் போது சூரியனுக்குள் கறுப்பு புள்ளியாக புதன் நகர்ந்து கொண்டேயிருக்கும். ஆசியாக்கண்டத்தின் பெரும்பாலான பகுதிகளிலும் ஆபிரிக்கா,ஐரோப்பா கண்டங்களிலும் இந்த கிரகணத்தைக் காணலாம்.

இந்த நிகழ்ச்சியை அதாவது சூரிய பாதையை புதன்கோள் கடப்பதை யாரும் வெறும் கண்களால் பார்க்கக் கூடாது என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். அதேபோல ஹைதராபாத், தொலைநோக்கி மூலமாகவும் பார்க்கக் கூடாது என்றும் அவர்கள் எச்சரிக்கின்றனர். இந்த அபூர்வ நிகழ்ச்சியை வெறும் கண்ணாலோ, பைனாகுலர் மூலம் பார்த்தாலோ கண்பார்வை இழக்க நேரிடும் என்றும் டாக்டர்கள் எச்சரிக்கின்றனர்.

தொலைநோக்கியால் உருப்பெருக்கப்பட்ட பிம்பத்தை திரையில் விழச் செய்து அதை மட்டுமே பார்க்க வேண்டும் என்றும் கொல்கத்தா விஞ்ஞானி கௌஸ்தல் சௌத்ரி தெரிவித்தார்.ஒரு நூற்றாண்டில் 13 முறையே இந்த அபூர்வ காட்சி தெரியும்.இதற்கு முன்பு 1999ஆம் ஆண்டு இந்நிகழ்ச்சி நடைபெற்றது.பின்னர் திரும்பவும் 2006 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் திகதி இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதற்கு பிறகு 2032 இல் நடைபெறுகிறது. இதுதான் இந்தியாவில் தெரியும். பொதுவாக புதன் டிரான்சிட் மே அல்லது நவம்பர் மாதத்தில் நிகழும். இது மே மாதத்தில் தெரியும் போது பெரிதாகக் காணப்படும். இதேபோல வெள்ளிக் கிரகணம் அதாவது வெள்ளிக்கிரகம் சூரிய வட்டு பகுதியை கடப்பதை ஜுன் மாதம் 9 ஆம் திகதி இந்தியாவில் காணலாம்.

இது மிகவும் அரிய நிகழ்ச்சியாகும். கடைசியாக 1882 ஆம் ஆண்டு தான் வெள்ளி கிரகணம் நடைபெற்றிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (பி)

## பொலிஸார் மீண்டும் பணிக்குத் திரும்பியுள்ளனர்

(பக்தாத்)

அமெரிக்கப் படைகளின் மேற்பார்வையின் கீழ் பக்தாத்தில் பணிகளை மேற்கொள்வதற்காக நூற்றுக் கணக்கான ஈராக்கிய முன்னாள் பொலிஸாரும் தமது வேலைக்குத் திரும்பியுள்ளனர்.

இவர்கள் சிறிய ரகத் துப்பாக்கிகளை வைத்திருக்கலாம் என்று கூட்டுப்படையினர் அனுமதி வழங்கப்பட்ட போதும் பெரும்பாலானவர்களிடம் துப்பாக்கிகள் இல்லையெனவும் பக்தாத் நகரவீதிகளில் பணிகளில் ஈடுபடுவதைக் காணமுடியவில்லை என்றும் செய்தி முகவர்கள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்கப் படைகளின் தலைமையின் கீழ் பக்தாத் வீழ்ந்த பின்னர் சட்டம், ஒழுங்கு என்பவற்றை எதிர்கொள்வதில் அந்நாட்டு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (பி-9)

# பலஸ்தீன பிரதமரை சந்திக்க இஸ்ரேலியப் பிரதமர் விருப்பம்

(டெல்அவிவ்)

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் செரோனும்,பாதுகாப்பு அமைச்சர் ஷாவுல் மவாஷும் பலஸ்தீனப் பிரதமர் மொகமட் அப்பாஸை அடுத்த வாரம் சந்திக்க திட்டமிட்டுள்ளனர்.

இதனை இஸ்ரேலிய இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ள போதிலும் இது குறித்து தமக்கு எதுவும் அறியக் கிடைக்கவில்லை என்று பலஸ்தீனத்தின் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறியிருக்கின்றார்.

இவ்வார பிற்பகுதியில் மத்திய கிழக்குப் பிராந்தியத்துக்கு அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொலின் பவல் விஜயம் செய்யும் போது இந்தச் சந்திப்பு இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (பி-9)

# பக்தாத்தில் மீண்டும் பிரிட்டிஷ் தூதரகம்

(பக்தாத்)

பக்தாத்தில் இராஜதந்திர நடவடிக்கைகளை பிரிட்டன் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

12 வருட கால இடைவெளிக்குப் பின்னர் தனது அலுவலகம் ஒன்றில் நேற்று முன் தினம் திறந்து வைத்த இராஜ தந்திரப் பணிகளை பிரிட்டன் ஆரம்பித்துள்ளது.

1991 இல் ஈராக்கிற்கான உதவித் தூதுவராக இருந்த கிருஷ் ரோபெக் சேஹார் பிரிட்டனின் புதிய அலுவலகத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.


ஈராக்கில் தற்போது அரசாங்கம் ஒன்று இல்லாததன் காரணமாக சேஹார் தூதுவராக அழைக்கப்படமாட்டார் என்று பிரிட்டன் கூறியிருக்கின்றது.

இந்த அலுவலகம் நிரந்தரமாக இயங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி-9)

# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்

வினா இல : 15 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

✠ கீழே தரப்பட்டுள்ள உருவங்களை அவதானித்து சரியான விடையைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக




உரு I உரு II உருIII உருiv உருv


01. 9 செவ்வகங்களால் ஆக்கப்பட்டுள்ள உரு எது? ------------------------
02. 5 சதுரங்களால் ஆக்கப்பட்டுள்ள உரு எது? ------------------------
03. 5 முக்கோணங்களால் ஆக்கப்பட்டுள்ள உரு எது? ------------------------
04. வட்டங்களால் மட்டும் ஆக்கப்பட்டுள்ள உரு எது? ------------------------
05. சதுரம் ஒன்றையும் 8 முக்கோணங்களையும் கொண்டுள்ள உரு எது? ------------

✠ முதலாவதாகத் தரப்பட்டுள்ள உருவுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடைய உருவுக்குரிய இலக்கத்தை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.


06.




07.





08.




✠ கோலத்தை இனம் கண்டு இடைவெளியை நிரப்புக.

09.




10.

| | | | |
|---|---|---|---|
| 3 × 2 | 4 × 3 | 3 × 5 | 6 × 4 |
| 6 | 12 | 15 | |
| 1 + 5 | 6 + 6 | 10 + 5 | 20 + 4 |

✠ கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.

11. வரனிடம் 20 முட்டைகள் இருந்தன. அவற்றுள் 2/5 பங்கு பழுதடைந்து விட்டன. நல்ல முட்டை ஒன்றின் விலை ரூபா 6.00 எனின் இம்முட்டை விற்பனையால் கிடைக்கும் பணம் எவ்வளவு?

------------------------------------------------------------

12. இரு எண்களின் பெருக்கம் 42. அவற்றின் கூட்டுத்தொகை 17. வித்தியாசம் 9. அவ்விரு எண்களும் யாவை?

------------------------------------------------------------

13. ஆரம்பப் பாடசாலை ஒன்றில் 100 ஆண்பிள்ளைகளும் 96 பெண் பிள்ளைகளும் உள்ளனர். ஒவ்வொரு பிள்ளைகளிடமிருந்தும் இல்ல விளையாட்டுப் போட்டிகளுக்காக ரூபா 5.00 பெறப்பட்டது. அங்கு முழுமையாகச் சேகரிக்கப்பட்ட பணம் எவ்வளவு?

------------------------------------------------------------


14. ஒரு விவசாயப் பண்ணையில் 125 மாடுகளும், 214 ஆடுகளும், 315 கோழிகளும் உள்ளன. அப்பண்ணையிலுள்ள பிராணிகளின் கால்களின் எண்ணிக்கை எத்தனை?

------------------------------------------------------------

15. என்னிடம் தனியொரு தாள்க்காசு உள்ளது. அதைக் கமலன் 10 தாள்க் காசுகளுக்கு சமமாகவும், ராகவன் 5 தாள்க் காசுகளுக்குச் சமமாகவும், மாதவன் இரண்டு தாள் காசுகளுக்கு சமமாகவும் மாற்றித்தருவதாகக் கூறினார்கள். என்னிடம் உள்ள பணத்தாளின் பெறுமதி என்ன?

------------------------------------------------------------

✠ கீழே உள்ள படக்குறியீடுகள் ஒவ்வொன்றும் அவற்றின் அருகே தரப்பட்டுள்ள வாக்கியங்களிலுள்ள சொற்களைக் குறிக்கின்றன. ஆனால் சொற்களும் படங்களும் சரியான ஒழுங்கில் இணைக்கப்படவில்லை.



✠ சிறுவர் இனிப்பை விரும்புவர்

✠ சிறுவர் புளிப்பை வெறுப்பர்

✠ பெரியோர் கசப்பை விரும்புவர்

✠ சிறுவர் உறைப்பை வெறுப்பர்

இதனை நன்கு அவதானித்து கீழ்வரும் சொற்கள் ஒவ்வொன்றையும் சரியாகக் குறிக்கும் படத்தின் கீழ்க் கோடிடுக.

16. இனிப்பு 17. சிறுவர் 18. விரும்புவர்



1) 2) 3) 1) 2) 3) 1) 2) 3)

19. வெறுப்பர் 20. புளிப்பு 21. உறைப்பு

1) 2) 3) 1) 2) 3) 1) 2) 3)

✠ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

22. "BANK OF CEYLON" என்பதன் தமிழ்க் கருத்து
1) மக்கள் வங்கி 2) வர்த்தகவங்கி 3) இலங்கை வங்கி 4) மத்திய வங்கி
23. மாதமொன்றின் முதல் எழுத்தாகவும் நாள் ஒன்றின் முதல் எழுத்தாகவும் அமையும் ஆங்கில எழுத்து.
1) J 2) M 3) O 4) A
24. இலங்கையின் தேசியக் கொடியில் காணப்படும் விலங்கு.
1) யானை 2) சிங்கம் 3) மான் 4) புலி
25. வீட்டு உரிமையாளருக்கு குடியிருப்போர் மாதா மாதம் வழங்கும் பணம்.
1) வரி 2) இலஞ்சம் 3) வாடகை 4) முற்பணம்
26. கிராமம் ஒன்றுக்கு பொறுப்பாக இருக்கும் அரச அதிகாரி.
1) பிரதேச செயலர் 2) அதிபர் 3) கிராம சேவகர் 4) ஆசிரியர்


✠ கீழே உள்ள கூட்டுக்குள் தரப்பட்டுள்ள விபரணத்தை நன்கு வாசித்து விளங்கி பொருத்தமான விடையைத் தெரிவு செய்து சரியான விடைக்குரிய இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

> தாவரங்களே உலகில் வாழும் உயிரினங்கள் யாவற்றுக்கும் வேண்டிய உணவைத் தயாரிக்கின்றன. இதனால் இவை உற்பத்தியாக்கிகள் எனப்படுகின்றன. ஏனைய அங்கிகள் தாவரங்களால் தயாரிக்கப்பட்ட உணவை நம்பி வாழ்கின்றன. எனவே இவை நுகரிகள் எனப்படும். பொதுவாக விலங்குகள் யாவும் நுகரிகள் ஆகும்.

27. கீழ்வருவனவற்றுள் உற்பத்தியாக்கியாக அமையப் பொருத்தமானது.
1) விவசாயி 2) சமையற்காரன் 3) ஆடு 4) புல்
28. கீழ் வருவற்றுள் நுகரி எது?
1) குருவிச்சை 2) எலுமிச்சை 3) வெட்டுக்கிளி 4) கோரை
29. தாவரங்கள் எவையுமே உலகில் இல்லாது அழிவடைந்து விட்டன எனின் கீழ் வருவனவற்றுள் என்ன மாற்றத்தை அவதானிக்கலாம்
1) உலகில் பச்சைப் பசுமை என்பவற்றைப் பேண மனிதர் பிளாஸ்ரிக்கால் ஆன பாரிய மரங்களை நடுவார்கள்
2) எல்லாக் காட்டு விலங்குகளும் நாட்டுக்குள் வந்து மனிதருக்கு துன்பம் தரும்
3) நிழல் தேடி விலங்குகள் யாவும் அலையும்
4) தாவரங்கள் அழிந்து சில காலத்தின் பின் ஏனைய விலங்குகளும் படிப்படியாக அழிவடைந்து விலங்குகளே உலகில் இல்லாது போகும்.
30. கீழ்வரும் கூற்றுகளுள் சரியான கூற்று எது?
1) விலங்குகள் யாவும் உற்பத்தியாக்கிகள்
2) தாவரங்கள் யாவும் நுகரிகள்
3) நுகரிகள் தமக்கு வேண்டிய உணவை தாமே தயாரிக்க மாட்டா
4) உற்பத்தியாக்கிகள் தமக்கு வேண்டிய உணவைத் தாமே தயாரிக்க மாட்டா


✠ கீழ் வருவனவற்றில் ஒன்று ஏதோ ஒரு அடிப்படையில் ஏனையவற்றிலிருந்து வேறுபடுகின்றது. வேறுபாடானதன் கீழ்க் கோடிடுக.

31.




1) 2) 3)

32.



1) 2) 3)

✠ கீழே சில நிகழ்வுகள் விபரிக்கப்படுகின்றன. இவற்றுடன் தொடர்புடைய சந்தர்ப்பத்தைத் தரப்பட்ட விடைகளில் இருந்து தெரிவு செய்து சரியான சந்தர்ப்பத்தினைக் குறிக்கும் இலக்கத்தை அருகேயுள்ள கூட்டினுள் எழுதுக.

33. நிகழ்வு:- ஒலிபெருக்கி ஒலித்துக்கொண்டிருக்கிறது. பல வகை விளக்குகள் ஒளிர்கின்றன. மக்கள் கூட்டம் கூட்டமாக அமர்ந்து மேடையை ஆவலோடு பார்க்கின்றனர்.

1) திருமணவீடு 2) ஆலயத்திருவிழா 3) மரணவீடு


34. நிகழ்வு:- மனிதனொருவனின் அலறல் சத்தம் மக்கள் கூடுதல். நடுவீதியில் மனிதனொருவன் உணர்வின்றிக் கிடக்கிறான். மக்கள் அவனை வாகனத்தில் ஏற்றி வைத்தியசாலைக்கு அனுப்புகின்றனர்.

1) மரண நிகழ்வு 2) திடீர் விபத்து 3) விளையாட்டுப் போட்டி

35. நிகழ்வு :- அதிபர் வருகின்றார். உரையாற்றுகின்றார். விருந்தினர் வருகின்றனர். பாடசாலையையும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் பாராட்டிப் பேசுகின்றனர். மாணவர்கள் அமைதியாக தமக்குரிய பரிசில்களைப் பெற்றுக் கொள்கின்றனர். கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

1) விளையாட்டுப்போட்டி 2) ஆசிரியர் தினம் 3) பரிசளிப்பு விழா

✠ கீழே தரப்பட்டுள்ள உருவை மூடுவதற்கு அதன் அருகே தரப்பட்டுள்ள கடதாசி அட்டைத் துண்டுகள் வைக்கப்படவேண்டிய முறையை இவ்வுருவினுள் வரைக. வரைந்த பின் உரிய ஆங்கில எழுத்துக்களை அவற்றின் மீது எழுதுக.



# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல : 13

### கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு

01. சி.டினோஜன்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
02. செ.திலக்ஷன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
03. தி.சயேந்தி- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
04. க.அபிராமி- சுதுமலை வடக்கு த.க. வித்தியாலயம்
05. சி.அபிராமி- யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
06. சோ.துவாரஹறன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
07. சு.மெர்ஜினி- யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி
08. க.கரிசினி- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
09. ச.நந்துஜா- யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்
10. தி.கோபிராஜ்- உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
11. சி.ஜோதிகா- யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
12. கு.கௌதமன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
12. தி.ரஜிக்கா- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை
13. உ.விதுஜன்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
14. சி.தேவகி- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
15. சி.தனுசிகா- சுதுமலை வடக்கு த.க.வித்தியாலயம்
16. ம.கார்த்திகா- சாவகச்சேரி அ.மி.த.க. பாடசாலை
17. ம.கஸ்தூரி- சுதுமலை வடக்கு த.க. வித்தியாலயம்
18. த.குகேதா- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
19. ச.சுவஸ்திகா- இருபாலை சீ.சீ. தமிழ்க் கலவன் பாடசாலை
20. சி.திலக்ஷன்- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
21. பே.பதீஸ்கரன்- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
22. க.கயூபன்- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
23. கே.சோபனா- யா/அருணோதயாக் கல்லூரி
24. ம.கோணேஸ்வரன்- துன்னாலை மெ.மி.த.க பாடசாலை
25. சி.மதூஷன்- வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
26. இ.நிவேதா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
27. க.கனியோன்- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
28. த.விஜிதன்- நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
29. த.நிருஜா- வல்வை றோ.க.த.க. பாடசாலை
30. கா.துவாணி- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை
31. து.வைஷ்ணவி- ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
32. மு.கீதாஜினி- புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்
33. கா.கோகுலன்- நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாலயம்
34. சி.ஜெயரஞ்சினி- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை
35. ப.லேக்கா- வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
36. பி.சர்மினி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
37. யோதிகா- வல்வை சிவகுரு வித்தியாசாலை
38. தி.சுஜிக்கா- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை
39. பா.சங்கீதா- நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
40. அ.விதுரா- கொக்குவில் மேற்கு சீ.சி.த.க. பாடசாலை
41. சி.கோவர்த்தனன்- கம்பர்மலை அ.த.க. பாடசாலை
42. ந.நிவாசன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
43. க.சிந்துஜன்- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
44. பி.தமயந்தி- சாவகச்சேரி மகளிர் கல்லூரி
45. சி.சஸ்மிதா- ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
46. க.பிரஷாயினி- கோண்டாவில் சீ.சீ.த.க. பாடசாலை
47. சி.துளசிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
48. கி.லக்சனா- கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
49. ச.சதுர்த்திகா- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
50. வி.சுபாசினி- சுதுமலை வடக்கு த.க. வித்தியாலயம்
51. க.சங்கீர்த்தன்- திருநெல்வேலி றோ.க.த.க பாடசாலை
52. பா.டினேஸ்- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
53. வ.தேனுகா- வல்வை சிவகுரு வித்தியாசாலை
54. க.டிசாந்தன்- பரியோவான் கல்லூரி
55. உ.உஷ்சாந்தி- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
56. பி.பிரதீபா- வல்வை சிவகுரு வித்தியாசாலை
57. ச.ஷண்மதுரன்- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை
58. ச.கணேசன்- திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
59. சா.மதுரமி- யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
60. பி.யோபிதா- வல்வை சிவகுரு வித்தியாசாலை
61. பு.கோபிகா- வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலயம்
62. ந.பரந்தாமன்- வல்வை சிவகுரு வித்தியாசாலை
63. ந.டிலக்ஷன்- கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை
64. ம.வித்தியா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
65. சி.ஜெயக்குமார்- வல்வை அ.மி.த.க. பாடசாலை
67. ம.சரண்யன்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
68. ப.சுதான்- உடுவில் மகளிர் கல்லூரி
69. ச.ஜெயகணேஷ்- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
70. ஈ.கோபிதன்- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
71. வி.கருசன்- இணுவில் மத்திய கல்லூரி
72. ஆ.நிரோயினி- நவாலி சென் பீற்றேர்ஸ் றோ.க.த.க. பாடசாலை
73. பூ.கிறேஸ்மன்- கட்டுடை சைவ வித்தியாசாலை
74. ச.பங்கஜம்- ஏழாலை அ.மி.த.க. பாடசாலை
75. ம.இந்துஜா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
76. ஜெ.ஸ்ரீராம்- மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க. பாடசாலை
77. த.அகர்ஜனன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
78. இ.மதனிகா- வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
79. க.லக்ஷனா- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
80. ச.சோபிகா- கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்
81. இ.பவீசன்- உடுவில் மகளிர் கல்லூரி
82. ச.லேனுகா- அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
83. த.தனுசியா- வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
84. வி.கல்யாணி- வல்வை றோ.க.த.க. பாடசாலை
85. ப.குகதர்சினி- அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
86. பா.சிவரட்ண செல்வசர்மா- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
87. சி.பிருந்தினி- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
88. ஐ.சயோராஜ்- யா/மத்திய கல்லூரி
89. நா.ஜதுர்சன்- கோண்டாவில் சீ.சீ.த.க. பாடசாலை
90. பி.லக்சிகா- வல்வை அ.மி.த.க.பாடசாலை
91. யோ.லவிஜெனா- அச்சுவேலி மத்திய கல்லூரி
92. வி.கல்யாணி- வல்வை றோ.க.த.க பாடசாலை
93. ச.சஜுதீப்- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
94. ஸ்ரீ.கானப்பிரியா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
95. பா.சந்திரா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
96. பா.சியாமளா- நவாலி மகாவித்தியாலயம்
97. தி.கௌரி- திருநெல்வேலி றோ.க.த.க. பாடசாலை
98. க.பிருதிவிராஜ்- அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
99. பொ.கோகிலன்- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
100. யோ.ரகாசன்- அல்லாரை அ.த.க. பாடசாலை
101. செ.நிசாந்- இணுவில் மத்திய கல்லூரி
102. கு.வாணி- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
103. ஆ.பஜிர்ந்தன்- உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
104. பா.சாயிபவானி- அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
105. செ.விதுர்சன்- நவாலி மகாவித்தியாலயம்
106. த.தமிழினி- நவாலி மகாவித்தியாலயம்
107. வி.மேனயா- நவாலி மகாவித்தியாலயம்
108. ம.சிவரோஜன்- வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
109. ச.அருண்- இணுவில் மத்திய கல்லூரி
110. செ.சுமணஜா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
111. கி.தேனுகா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி
112. சி.கௌதமி- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
113. வி.தனுசியா- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
114. த.ரூசிகா- இணுவில் மத்திய கல்லூரி
115. கு.சுபாரதன்- கரணவாய் தாமோதர வித்தியாசாலை
116. பூ.திலக்சி- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
117. செ.திருக்குமரன்- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
118. சி.சிவசாந்- தம்பசிட்டி பருத்தித்துறை
119. ச.அனுசா- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
120. ச.துளசிராம்- தாவடி இ.த.க. பாடசாலை
121. த.துவாரகா- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
122. கெ.வாசுகி- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
123. சி.வசந்தகுமாரன்- பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி
124. கி.யாழினி- நவாலி மகாவித்தியாலயம்
125. க.கணபாலன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
126. கீ.அச்சுதன்- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
127. சீ.சுஜீபனா- அச்சுவேலி மத்திய கல்லூரி
128. சி.கிசோன்- உடுவில் மகளிர் கல்லூரி
129. ச.அபிநயா- சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
130. ம.சரண்யா- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
131. கு.பபீகரன்- அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
132. ச.மேனுசா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
133. அ.ரோசிகா- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
134. ந.பவிதா- ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
135. ந.கோகுலன்- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை
136. ஈ.சௌமிதா- யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி
137. கு.விஜிதா- வட. றோ.க.த.க பாடசாலை
138. இ.கிரிசாந்- யா/மத்திய கல்லூரி
139. க.யரூசனா- தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி
140. இ.மிதுனா- திருக்குடும்பக் கன்னியர் மடம்
141. ஸ்ரீ.கஸ்தூரி- அச்சுவேலி மத்திய கல்லூரி
142. செ.கலிஸ்ரா- நவாலி சென் பீற்றேர்ஸ் றோ.க.த.க. பாடசாலை
143. சி.தயனி- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
144. அ.யஸ்மின்- அல்வாய் றோ.க.த.க. பாடசாலை
145. உ.கோபிகா- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
146. த.தனுசியா- அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்
147. ந.சிந்துகா- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
148. இ.சரணிகா- நவாலி மகாவித்தியாலயம்
149. தி.ஜெயந்தி- அச்சுவேலி மத்திய கல்லூரி
150. நா.நளாயினி- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
151. ஜெ.கீர்த்தனா- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
152. க.அனுசியன்- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
153. ப.தூயவன்- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம்
154. ப.கிரிதரன்- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம்
155. ஆ.சேந்தன்- உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
156. ர.மயூரி- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
157. க.நிரோஜன்- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
158. சி.வாணன்- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
159. சி.லக்சாஜினி- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
160. செ.சஜேந்திரன்- யா/புனித பத்திரிசியார் கல்லூரி
161. சகாதேவன்- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
162. யோ.சிந்துஜா- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை

## 90 ஆயிரம் சிறைக்கைதிகள் நாடு முழுவதும் உள்ளனர்

### சிறைச்சாலை திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளில் சுமார் 90 ஆயிரம் பேர் சிறைக்கைதிகளாக தண்டனை அனுபவித்து வருகின்றதாக சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட புள்ளி விபரத்தகவலின் படி கைதிகளாக இருப்பவர்களில் சுமார் 22 ஆயிரத்து 500 பேர் 5 வருடம் அல்லது அதற்கும் கூடுதலான ஆண்டுகள் தண்டனை பெற்றார்கள் என்றும், 4 ஆயிரத்து 500 பேர் ஒருவருடம் முதல் 5 வருடத்திற்குட்பட்ட காலச்சிறைத் தண்டனைகளை அனுபவித்து வருகிறார்கள்.

சுமார் 13 ஆயிரம் பேர் 3 மாதம் முதல் ஒரு வருடம் வரையிலான சிறைத்தண்டனை பெற்றவர்கள்.

4 ஆயிரத்து 600 பேர் 6 மாதங்களுக்கும் குறைந்த தண்டனையைப் பெற்றவர்கள் என்றும், ஏனையோர் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் எனவும் தெரிய வருகிறது. (க-10)


## யாழ்ப்பாணம் மாநகரசபை

### தனியார் பாதுகாப்புச் சேவையை பெற்றுக் கொள்ளுவதற்கான விண்ணப்பம்

புனர்மைக்கப்படும் யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்திற்கு பாதுகாப்புச் சேவையை வழங்கக்கூடிய பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் பெற்ற தனியார் பாதுகாப்புச் சேவையினரிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பாதுகாப்புப் பணியில் பகல் 02 பேரும், இரவு 04 பேரும் பணியில் ஈடுபடல் வேண்டும். தெரிவு செய்யப்படும் நிறுவனம் மாநகரசபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் சேவை விபரம், சம்பளம் அங்கீகாரம் பெற்றமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ் போன்றவற்றுடன் யாழ். மாநகர ஆணையாளருக்கு 19.05.2003ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

இ. இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம். (C/6105)


### வினாத்தாள் 13இன் விடைகள்

| | |
|---|---|
| 01. (3) | 02. (4) |
| 03. (2) | 04. (3) |
| 05. (1) | 06. (1) |
| 07. (3) | 08. (2) |
| 09. 24 | 10. 80 |
| 11. சூரியன் | 12. ரூபா 1,000 |
| 13. இலவசக் கல்வி | |
| 14. 1 | 15. மாசி |
| 16. (3) | 17. (2) |
| 18. (4) | 19. (2) |
| 20. (1) | 21. (2) |
| 22. (3) | 23. (2) |
| 24. (3) | 25. (2) |
| 26. (3) | 27. (2) |
| 28. (3) | 29. (4) |
| 30. (2) | 31. (3) |
| 32. (2) | 33. (3) |
| 34. (4) | 35. (1) |
| 36. (3) | 37. (4) |
| 38. (1) | 39. (2) |
| 40. (2) | |

## ஆங்கில ஆசிரியர்களுக்கு தேர்ச்சி மட்டப் பரீட்சை

ஆங்கில ஆசிரியர்களின் தேர்ச்சிமட்டத்தைக்கண்டறிவதற்கான பரீட்சை நாளை பி.ப. 2மணிக்கு யாழ். புனித மரியாள் பாடசாலையில நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். வலயப் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் தவறாது இப்பரீட்சைக்குத் தோற்ற வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்

இதேவேளை, இப்பரீட்சைக்குத் தோற்றுவதன் மூலம் அவர்களுக்கு தேவையான பயிற்சித்திட்டங்கள் உலகவங்கியின்அனுசரணையுடன் வழங்கப்படவுள்ளதாகவும பயிறசித–திட்டங்களில பங்கேற்கும் ஆசிரியா களுக்கு கொடுப்பனவுகளும் பயிற்சி முடிவுறும் போது ஊக்குவிப்புக்கள், சான்றிதழ்கள் மற்றும் புலமைப்பரிசில்கள் என்பனவும் வழங்கப்படு மெனவும் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார் (இ-5)

## பஸ் சேவை சீரில்லை

(சரசாலை)

யாழ்ப்பாணத்துக்கும் கொடிகாமத்திற்கும் இடையில் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ் சேவை யினை ஒழுங்காக நடத்தத் தவறுவதால் பயணஞ் செய்யும் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகிள்றார்கள்.

குறிப்பாக இப்பகுதிகளில் வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 794 ஆம் இலக்க பஸ்ஸே சேவையை வழங்கி வந்தது. இச்சேவையும் தற்போது சீரன முறையில இடம் பெறுவதில்லை. இது குறித்து வடபிராந்திய போக்குவரத்து சபையினை உரிய நடவடிக்கை எடுக்குமாறு பயணிகள்கேட்டுள்ளனர். (உ-50)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் கல்வியாண்டு 2002/2003**

முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் யாவும் மாணவரிடமிருந்து 30.05.2003ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**இரண்டாம் அரையாண்டு:-**

1. இரண்டாம் வருடம் பகுதி I
2. மூன்றாம் வருடம் பகுதி II
3. நான்காம் வருடம் பகுதி III

மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்திற்கு ரூபா 50/= வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச் சீட்டினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப்ப் படிவங்களை 08.05.2003ஆம் திகதி முதல் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். பரீட்சை நடைபெறும் அலகுகளின் விபரத்தையும், நேர அட்டவணையையும் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி அறிவிப்புப் பலகையில் பார்வையிடலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பதிவாளர். (C/6106)

# தமிழீழத்தைக் கட்டியெழுப்ப ஏதுவாகவே சமஷ்டி பற்றி ஆராய்ந்து வருகிறோம்

## புலிகளின் அரசியல் குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்ற புலித்தேவன் கருத்து

(கொழும்பு)

**எதிர்காலத்தில் தமிழீழம் ஒன்றை நாங்கள் கட்டியெழுப்பும்போது, எவ்வாறான கட்டுமானங்கள் இருக்கவேண்டும், அதன் அதிகாரங்கள் மற்றும் அவற்றின் பல்வேறு செயற்பாடுகள் எவ்வாறு அமையவேண்டும் என்பன பற்றி அறிந்து கொள்வதற்காகவே நாம் சமஷ்டி முறையினைக்கொண்ட நாடுகளுக்குச் சென்று வருகிறோம்.**

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலக இணைப்பாளரும்,கடந்தமாதம் 26ஆம் திகதி சமஷ்டி பற்றி ஆராயச் சென்ற 21 பேர்கொண்ட விடுதலைப் புலிகளின் அரசியல் குழுவுக்கு தலைமை வகிப்பவருமான புலித்தேவன் வெளிநாட்டுச் செய்தி ஊடகம் ஒன்றிற்கு தமது மேற்படி விஜயம்தொடர்பாக வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

எமது தேசியத்தலைவரின் எதிர்பார்ப்பிற்கும் எண்ணங்களுக்கும் அமைய தமிழீழத்தைக் கட்டியெழுப்பி பொருளாதார ரீதியிலான சுபீட்சமான ஒரு வாழ்வை எமது தமிழீழ மக்கள் அடைய வேண்டும் என்பதற்காகவே நாங்கள் பெரிதும்முயன்று வருகிறோம்.

அதற்காக நாங்கள் பல்வேறு நாடுகளுக்கும் சென்று அங்குள்ள சமஷ்டி பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

இதுவரை ஜேர்மன்,பெல்ஜியம் சுவிடசர்லாந்து,ஸ்பெயின் ,நோர்வே, ஹொலன்ட் ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்குள்ளஉயர்அதிகாரிகளுடன் கலந்துரையாடி சமஷ்டி பற்றிஆராய்ந்தோம்.

நாங்கள் இதுவரை இரண்டு தடவைதான் இத்தகைய சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறோம்.

எனவே,இன்னும் பலநாடுகளுக்குப் பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டும்.குறிப்பாக கனடா,இங்கிலாந்து,அவுஸதிரேலியா,அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் சென்று அங்குள்ள சமஷ்டி முறை பற்றியும் ஆராய்ந்த பின்னரே நாம் எமது மக்களுக்கு எத்தகைய முறையில் அமைந்த சமஷ்டித் தீர்வு பொருத்தம் என்பதை தீர்மானிக்க முடியும் என்றார்.

யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் பிரிவைச் சேர்ந்தவரும் மேற்படி 21பேர் கொண்ட குழுவில் அங்கம் வகிப்பவருமான கீதா இது தொடர்பாக கருத்துக் கூறுகையில்,

சமஷ்டி பற்றி ஆராயச் சென்ற நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் எமது அன்பிற்குரிய தமிழ் மக்கள் எமமை மிகுந்த அன்போடு வரவேற்றார்கள்.

அவர்கள் மிகுந்த தேசப் பற்றுடையவர்கள் என்பதுடன் எமது போராட்டத்தின் தன்மைகளையும்,அதனால் நாமும் எமதுமக்களும் பட்ட துன்பங்களையும் நன்குணர்ந்துள்ளார்கள்.

அது மட்டுமன்றி,எமது விடுதலைப போராட்டத்தின் தன்மையையும் எமது கோட்பாடுகளையும் அந்தந்த நாடுகளுக்கு உணர்த்தும் வகையில் எழுச்சிப் போராட்டங்களை நடத்தியும் ஊர்வலங்களை நடத்தியும் எமக்கு , ஆதரவளித்தார்கள்.

அவர்களின் ஆதரவினாலேயே இன்று நாம் பல்வேறு நாடுகளுக்கும் சென்று சமஷ்டி பற்றி ஆராய்ந்து வருகிறோம்.

அத்துடன்,நாம் சமஷ்டி பற்றி கலநதுரையாடச் சென்ற நாடுகளின் உயர் அதிகாரிகள் மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் எம்மை மிகுந்த மரியாதையுடன் வரவேற்று தமது நாடுகளின் சமஷ்டி பற்றி எடுத்துக் கூறியுள்ளார்கள்.

குறிப்பாக,நோர்வே நாட்டுப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன்,விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்,ஹொலன்ட் நாட்டுப் பிரதம மந்திரி,ஜேர்மன் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் ஆசிய நாடுகளுக்கான பொறுப்பாளர் டாக்டா முல்லர் ஆகியோர் எம்மை சந்தித்துள்ளனர் என்றார்.

இதேவேளை கடந்த மாதம் முதல்



சமஷ்டி பற்றி ஆராய்வதற்காக பல்வேறு நாடுகளுக்கும் விஜயம் செய்து வரும் இவர்கள் நாளை வயாழக்கிழமை நாடு திரும்பவுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-10)

## நினைவுப்பேருரை

(கொழும்புத்துறை)

தனிநாயகம் தமிழ் மன்றத்தினரின் ஏற்பாட்டில் நாளை பி.ப. 3.45 மணிக்கு கொழும்புத்துறை சவேரியார் திருத்துவக்கல்லூரியின் கேட்போர் கூடத்தில் 'தமிழ்த்திரையுலகு - பிரதான போக்குகளும் மாற்று முயற்சிகளும்'எனும் பொருளில் தனிநாயகம் அடிகள் நினைவுபபேருரை இடம் பெறவுள்ளது.

யேசுராசாவினால் இந் நினைவுப் பேருரை நிகழ்த்தப்படவுள்ளது.(உ-51)

இரண்டாவது உலக இந்து மகாநாடு தொடர்பாக...

*உரத்த சிந்தனை*

## மந்திர மோகமும் வடமொழித் துவேஷமும்

மந்திரம் என்பது நினைப்பவரைக் காப்பது. பிரார்த்தனை,பூஜை முதலியவற்றிலும் மாந்திரீக விடயங்களிலும் மந்திரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தாந்திரிக வழிபாட்டு முறைகளிலும் தந்திரம்-மந்திரம்-யந்திரம் என்ற மூவகை வழிபாட்டு முறைகளில் நடுநாயகமாக மந்திரம் விளங்குகின்றது.

இத்தகைய காரணங்களால், சமய நம்பிக்கையுடைய பலருக்கும் மநதிரங்களில் பெருவிருப்பு ஏற்படுதல் இயல்பானதே. ஒவ்வொருவரும் தத்தமக்குப் பிடித்தமான மந்திரங்களை மனனம் செய்து ஓதிவருகின்றனர்.

*இம்மந்திரங்கள் மீது இக்காலத்தில் சாதாரண மக்கள் பலருக்கு அடங்காத மோகம் ஏற்பட்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. பக்தியும் விருப்பமும் உண்டாவதும் அதற்கேற்பத் தம்மைத் தகுதியுடையவர்களாக ஆக்கிக்கொண்டு மந்திரம் ஓதுவதும் தவறானதன்று.ஆனால் தகுதியற்றவர்கள் தவறான முறையில் மோகம் கொள்வதே இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.*

அதாவது,மந்திரங்கள் உயர்சக்தி வாய்ந்தவை. "தெய்வங்கள் மந்திரங்களுக்குள் அடக்கம்" என்று மஹாவிஷ்ணுவே கூறியிருக்கிறார்.அதனால்,தெய்வங்களை எவ்வளவு பயபக்தியோடு போற்றுகின்றோமோ அவ்வளவு பயபக்தியோடு மந்திரங்களையும் பேண வேண்டும்.இங்கு பக்தி என்ற சொல்லுடன் பயம் என்ற சொல்லும் இருப்பது கவனிக்கத்தக்கது.

இன்று மந்திரங்களை ஓதும் பலரிடம் பயம் மட்டுமல்லாமல் பக்தியும் மதிப்பும் கூட இருப்பதில்லை. சர்வ அலட்சியமாக வாய்க்கு வந்தபடி ஓதுகிறார்கள். ஒரு யாகமந்திரத்தின் உச்சரிப்புத் தவறுகாரணமாக பயங்கரமான ஆட்டுக்கடா ஒன்று தோன்றி யாவற்றையும் அழித்த க்தை புராணங்களில் உண்டு. மந்திரங்களின் பயன்பாட்டில் உச்சாரணம் மிக முக்கியம். அக்ஷர சுத்தமாக உச்சரிக்கப்பட வேண்டும்.வடமொழி மந்திரங்களைச் சரியாக உச்சரிக்க வடமொழி அறிவும் அவசியம்.

இனி,மந்திர சித்திக்கு குருவருள் அவசியம். குருவின் உபதேசமும் தீக்ஷையும் தான் எந்த வழிபாட்டுக்கும் முதற்படி.ஆசாரம், ஒழுக்கம், தூய்மை என்பன அதற்கு அடுத்தபடி. இவை இல்லாதவர்கள் மந்திரமோதுவது மஹா பாவம். சமயதீக்ஷ பெறாதவர்கள் தேவாரம் ஓதுவதே தகாது என்கிறார் நாவலர். இன்று பலர் சமய தீக்ஷயும் இல்லாமல்,வடமொழி அறிவு கொஞ்சமும் இல்லாமல்,குரு மூலமான உபதேசம் எதுவுமில்லாமல் மாமிச போசனமும் அருந்திவிட்டு காயத்திரி மந்திரம், திரியம்பக மந்திரம் முதலிய மஹாமந்திரங்களை அநேக உச்சரிப்புப் பிழைகளுடன் பகிரங்கமாக ஓதிவருகிறார்கள். இது அவர்களுக்கு மட்டுமன்றி உலக நன்மைக்கே பாதகமாகும்.

இது ஒரு புறம் இருக்க, மறுதலையாக வடமொழித்துவேஷம் இன்னொரு புறத்தில் காணப்படுகிறது. ஆரியமும் செந்தமிழும் தனது இரு கண்களாகக் கொண்டவன் சிவபிரான் என்று தேவார திருவாசகங்கள் உரைக்கின்றன.தமிழ் எங்கள் தாய்மொழி.வடமொழி எங்கள் தந்தை மொழி. எனவே வடமொழியை வெறுக்காது அதனைக் கற்றுக் கொள்ள யாவரும் முன்வர வேண்டும். அதன் மூலம் மந்திரங்களைச் சரியானபடி உணர்ந்து உச்சரிக்க முடியும்.

மேலும் தகுதிக்கு மீறிய ஆசைகளை விடுத்து தமிழ் மந்திரங்களாகிய திருமுறைகளை பயபக்தியோடு ஓதிவருவோமானால் எத்துணை பயன் பெறலாம். சைவத் திருமுறைப்பாடல்கள் அளவற்ற சக்தி வாய்ந்தவை. மந்திரங்களுக்கு இணையானவை. இவற்றை மறந்து விடக்கூடாது. கிரக பீடைகள் நீங்க "வேயுறு தோளி பங்கன்", நோய்,பிணி,துன்பம்போக "இடரினும் தளரினும்" என்று ஒவ்வொரு தேவைகளுக்கும் உரிய தேவாரப்பதிகங்களை ஆன்றோர் வகுத்துத் தந்துள்ளனர்.

எனவே,மந்திர மோகத்தைப் போக்கித் தமிழ்மறையைப் பேணுவோம்.அதேநேரத்தில், வடமொழித் துவேக்ஷத்தைப் போக்கி, அம்மொழியைக் கற்றுணர்ந்து தீக்ஷபெற்றுக் குருவின் உபதேசத்துடன் சுத்த சைவராகி மந்திரங்களையும் போற்ற முன்வருவோமாக.

**ப.சிவானந்த சர்மா B.A (Hons) (கோப்பாய் சிவம்)**
**நிர்வாக உத்தியோகத்தர்- வேதசிவாகம குரு குல கலாசாலை**

## எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டி காரைநகர் கிழவன் காடு ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம் நடாத்தும் இந்து சமய எழுச்சி விழா இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடை பெறவுள்ளது.

விஷேட பூசை மற்றும் மங்கள வாத்திய இசையுடன் ஆரம்பமாகும் இந் நிகழ்வில், திருநெல்வேலி சைவ குருமார் பயிற்சிக் கல்லூரி மாணவர்களின் வேத பாராயணம் மற்றும் கிழவன் காடு கலாமன்ற மாணவிகளின் பண்ணிசை, இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரமுகர்களின் சிறப்புச் சொற்பொழிவுகள் என்பன இடம் பெறவுள்ளன. (உ-10)

* * *

(காரைநகர்)

காரைநகர் சைவமகாசபையில் இன்று புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு உலக இந்து மாநாட்டு எழுச்சி விழா சபைத் தலைவர் க.தில்லையம்பலம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பண்ணிசை ஓதல்,சமயச்சொற்பொழிவு ஆகியன இடம்பெறவுள்ளன. (உ-246)

## சமய நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டி சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு சமயப் பெரியார்களின் சிறப்புச் சொற்பொழிவுகளும்,சிவன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் சிறப்பு நிகழ்ச்சிகளும் நடை பெறவுள்ளன. (உ-10)

## தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

இந்த வருடத்தில் வடக்குக் கிழக்கு மாகாணப் பகுதிகளில் தேசிய தடுப்பு மருந்தேற்றல் தினங்களாக செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதியும்,ஓக்டோபர் மாதம் 26ஆம் திகதியும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இரு தேசிய தடுப்பு மருந்தேற்றல் தினங்களிலும் ஐந்து வயதுக்குட்பட்ட சகல பிள்ளைகளையும் தடுப்பு மருந்தேற்றல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று மேலதிக போலியோ தடுப்பு மருந்தை வழங்குமாறு ,யுனிசெவ் நிறுவனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது (உ)

## உலக உணவுத் திட்டத்தின் கீழ் நான்கு வீதிகள் திருத்தம்

(சுதுமலை)

வலி-தென்மேற்கு பிரதேச செயலகப்பகுதிகளில் உள்ள 4கிரவல் வீதிகள் உலக உணவுத் திட்டத்தின் கீழ் சிரமதான அடிப்படையில் திருத்தம் செய்யப் படவுள்ளதாக யாழ்.பிராந்திய உளூராட்சி ஆணையாளர் மானிப்பாய் பிரதேச சபைக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம், மாதகல் வேலவன் வீதி,சண்டிலிப்பாய் மத்தியில் உள்ள சவாரி டச்சுவீதி, பண்டத்தரிப்புப் பகுதியில் உள்ள ஏருபுளியடி வீதி, பிரான்பற்றுப் பகுதியில் உள்ள பாத்திமா வீதியின் முதலாம் ஒழுங்கை என்பனவே செப்பனிடப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பல வருடங்களாக இந்த சிறிய வீதிகள் திருத்தம் செய்யப்படாமல் இருந்து வந்தமையும் இதனால் மழைகாலத்தில் இவ் வீதியில் போக்குவரத்துச் செய்வதில் இடையூறுகள் ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ-252)

## *ஐ.நா. அனுசரணையுடன் 118 வீடமைப்புத் திட்டம்*

(கொழும்புத்துறை)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அரியாலை, சலியப்பிட்டி, முள்ளி ஆகிய பகுதிகளை உள்ளடக்கி 118 வீடமைப்புத் திட்டம் ஒன்று ஐ.நா. தூதரக அனுசரணையுடன் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

மேற்படி பகுதிகளில் மீளக் குடியமர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் அடிப்படை வசதிகளற்ற குடும்பங்கள் இத்திட்டத்தின் பயனாளிகளாக சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பகுதிகளில் இடம்பெற்று வரும் வெடிப்பொருட்கள் அகற்றும் பணிகள் முடிவுற்றதும் மேற்படி வீடமைப்புத் திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது.(உ-51)

## தரம் 09 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பரிசுகள் ரூபா 750/-,500/-,250/-
மற்றும் சான்றிதழ்களும்

விடயம் : "தாய் அன்பிற்கு நிகரேது"

சொற்கள்: 175-200 வரை

கட்டுரைகள் 25.05.2003 ற்கு முன்னதாக "மாணவர் கட்டுரைப் போட்டி" வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**

**கட்டுரைப் போட்டி இல-3**

மாணவர் முழுப் பெயர் :------------------------------
பாடசாலை :------------------------------
:------------------------------
கற்கும் தரம் :---------------

**உறுதிப்படுத்துகிறேன்**

---------------------
ஆசிரியர்

# இன்று ஒரு தகவல்

## வயிற்றுக்கோளாறு

ஒருவர் வந்தார். சார்! ஒருநாள் கண்ணைப்பற்றிச் சொன்னீர்கள்! அதனால் எனக்கு எந்தவிதப் பிரயோசனமும் இல்லை. ஏனெனறால்-எனக்குக் கண்ணிலே எந்தப பிரச்சினையுமில்லை. இன்னொரு நாள் காதைப்பற்றிச சொன்னீர்கள். அதனாலும் எனக்கு எந்தவித பிரயோசனமும் இல்லை. ஏனென்றால் எனக்குக்காதில் எந்தவிதப் பிரச்சினையுமில்லை என்று அடுக்கிக்கொண்டே போனார். 'சரி! உங்களுக்குளங்கே பிரச்சினை?' என்று கேட்டேன். 'இங்கே தான் சார்!' என்று தன்னுடைய வயிற்றைத் தொட்டுக்காட்டினார்.

'எண் சாண உடம்புக்கு சிரசே பிரதானம் என்றுதானே எல்லோரும் சொல்லுவார்கள்! ஆனால் இவரைப் பொறுத்தவரைக்கும் எண்சாண உடம்புக்கு வயிறே பிரதானம்! அவரின் உடம்பைப் பார்த்தாலே அது தான் பிரதானமாகத தெரிகிறது. வஞ்சகமில்லாமல் அதை வளர்த்து வைத்திருக்கிறார். என்னசார் இப்படி? என்று கேட்டால் 'எதுக்கு வஞ்சகம் பண்ணினாலும் வயிற்றுக்கு வஞ்சகம்பண்ணக்கூடாது' என்கிறார். அதனாலேதான் இப்பொழுது அவருக்கு அங்கேயே பிரச்சினை ஆரம்பமாகியிருக்கிறது.

மற்றப பிரச்சினை என்று சொன்னால், அதற்கெல்லாம் பேச்சுவார்ததை மூலம் தீர்வு கண்டிடுவோம் என்று சொல்லிவைக்கலாம். இந்தப் பிரச்சினைக்கு அதுமாதிரி நடத்திக்கொண்டிருக்க முடியாது. விபரத்தைப் புரிந்துகொண்டு அதன்படி நடந்துகொண்டால்தான் முடியும். வயிற்று உப்பிசம் என்பது மனிதருக்கு மட்டுமில்லை. ஆடு, மாடுகளுக்கும்கூட உண்டாகிற ஒரு பிரச்சினைதான். வயிற்றுக்கு எப்படிக் காற்றுப்போகிறது.?

நாம் சப்பிடுகிறபொழுது சாப்பாட்டை மட்டும் விழுங்கினால் பரவாயில்லை. காற்றையும் சேர்த்தல்லவோ விழுங்குகிறோம். அதுவும் அவசரமாகச் சாப்பிடுபவர்கள் சாப்பாட்டோடு அதிகமாகக் காற்றை விழுங்குகின்றனர். மனக்கோளாறு உள்ளவர்கள், கவலைப்பட்டுக்கொண்டே சாப்பிடுபவர்கள் எல்லோரும்கூட அதிகமான காற்றை ஆகாரத்தோடு சேர்த்துச் சாப்பிடுகிறார்கள். சாப்பிடும்பொழுது சிரிப்பது, அரட்டையடிப்பது எல்லாம்கூட நிறையக்காற்றை உள்ளே தள்ளிவிடுகின்றன.

எதையாவது குடிக்கக்கொடுத்தால் மடக்கு மடக்கென்று விழுங்கககூடாது. நடந்துகொண்டே சாப்பிடக்கூடாது. இவற்றாலெல்லாம் காற்று வயிற்றினுள்ளே போகிறது. லேசாக நடந்துபோவது ஜீரணத்துக்கு நலலது. பிஸ்கட், மில்க்ஷேக், சோடா, கிறஷ் ஆகியவைகள் வாயுததொநதரவை அதிகமாக்கும். சோடாக்குடித்துவிட்டு ஒரு ஏப்பம்விட்டு விடடால் எல்லாம் சரியாகப்போய்விடும என்று நினைப்பது தப்பு. ஏப்பம் விட்டபின்னர் கொஞ்சம் சுகமாக இருப்பதுமாதிரி இருக்கும். இருந்தாலும் பெரும்பகுதி காற்று வயிற்றிலேதான் தங்கியிருக்கும்.

வாயுத் தொந்தரவினாலே வயிற்றில் வலி இருந்தால் சூடான வெநநீர் குடிக்கலாம். வெந்நீர் ஒத்தடம் கொடுக்கலாம். இதனாலே கொஞ்சம் குறையும். அமில எதிர்ப்பு மருந்து சாப்பிடலாம். இதையும் மாத்திரையாகச் சாப்பிடுவதைவிடத் திரவமாகச் சாப்பிடுவது இன்னமும் நல்லது. சாப்பிட்டு ஒரு மணிநேரம் கழித்து இதைச சாப்பிடலாம். புளித்த ஏப்பம், வயிற்றிலிருந்து அமிலம் மேலெழும்பி உணவுக்குழலில் ஏறுவதனால் வருகிறது. இதனால் நெஞ்சுப்பகுதியில் எரிச்சல் வரும்.

அவசர அவசரமாகச் சாப்பிடுவது, குடிப்பது, உதரவிதானத்திலே உணவுக்குழல் அமுக்குவது, உடம்பு குண்டாயிருப்பது, சாப்பிட்ட உடனே படுத்துக்கொள்வது ஆகியவற்றினாலெல்லாம் இது வரும். கருவுற்ற தாய்மார்களுக்கும் இது ஒருபிரச்சினை.

புளித்த ஏப்பத்துக்கு அமில எதிர்ப்பு மருந்து சாப்பிடவேண்டும். இதைக் கவனிக்காமல் விட்டுவிட்டால் உணவுக்குழல் வயிறு இங்கேயுள்ள உட்புறச்சுவரிலே உள்ள திசுக்களை அமிலம் அரிக்க ஆரம்பித்து விடுமை. பின்னர் புண்ணாகிவிடும். சாப்பிட்ட உடனே சாக்லெட், பெப்பர் மின்ட், மது, கோப்பி, புகையிலை என்ற ஞாபகம வரக்கூடாது. இவைகள் உணவுக்குழலின கீழுள்ள முனையிலிருக்கிற வால்வைத தளரவைத்து விடுகின்றன. இதனால்அமிலம் சுலபமாக மேலே ஏறுவதற்கு வசதியாகப் போய்விடும். வயிற்றிலே மேல்பகுதியில் எரிச்சல் உண்டாகியிருக்கிறதென்றால் அங்கேயுள்ள சுவர்பரப்பில் புண உண்டாகியிருக்கிறதென்று அர்த்தம். அப்படி இருந்தால் மது-கோப்பி, காரமசாலா, ஆஸ்பிரின் என்பவற்றைத் தொடவேகூடாது.

சாப்பாட்டு அளவையும் குறைத்துக்கொள்ளவேண்டும். மெதுவாகச சாப்பிடவேண்டும். வயிற்றுப்புண்ணுக்கு உற்சாகம் கொடுத்து அதை ஊக்கப்படுத்துவது எது தெரியுமா? ஆஸ்பிரின், புகையிலை, மது ஆகிய மூன்றுந்தான். கோப்பி அமிலச்சுரப்பை அதிகமாக்கும். வயிற்றில் புண் இருந்தால் மூன்றுவேளை சாப்பிடுவதற்குப பதிலாக அதே அளவு சாப்பாட்டைப் பிரித்து ஆறுவேளையாகச் சாப்பிடலாம். எல்லாருக்கும் பொதுவாகத் தெரிந்திருக்க வேண்டிய முக்கியமான ஒரு விஷயம்-கொஞ்சமாகச் சாப்பிடுங்கள்! மெதுவாகச சாப்பிடுங்கள்! உட்கார்ந்து சாப்பிடுங்கள்! எரிச்சல்-கோபம்- கவலை போன்றவைகள் இல்லாமல சாப்பிடுங்கள்! நொறுங்கச்சாப்பிட்டால் நூறுவயது! எதையாவது சாப்பிடககூடாது. எதைச் சாப்பிட்டால் நல்லதோ அதையே சாப்பிடவேண்டும்.

சிலரை ஹோட்டலுக்கு அழைத்துக்கொண்டுபோய் என்ன சாப்பிடுவீர்கள்? என்று கேட்டால் எதுவாக இருந்தாலும் பரவாயில்லை என்பார்கள். அது தப்பு.

'சார்! வயிற்றுவலி என்றுகொண்டு உங்களிடம் வந்தேன்! நீங்கள சொன்னவற்றைக் கேட்டதன பின்னர் எனக்குத தலைவலியும. சேர்ந்து வந்துவிட்டது! உடனே அதற்கென்று ஒருதகவல் ஆரம்பித்து விடாதீர்கள்! இப்போது விட்டுவிடுங்கள். இன்னொருநாள் சாவகாசமாக வருகிறேன' என்றார் அவர்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# முன்னோடி முகாமையாளர்களை மக்கள் வங்கி பாராட்டிக் கௌரவம்

(தென்மராட்சி)

மக்கள் வங்கியின் பாடசாலைச் சிறுவர்களுக்கான சிசு உதான சேமிப்புக் கணக்கில் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் சேகரித்து சாதனை படைத்த மக்கள் வங்கியின் நான்கு கிளை முகாமையாளர்கள் மக்கள் வங்கியினால் பாராட்டப்பட்டனர்.

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி மக்கள் வங்கிக்கிளையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம் பெற்ற இந் நிகழ்வில் சாவகச்சேரி முகாமையாளர் எஸ். பாலச்சந்திரன், ஸ்ரான்லி வீதிக்கிளை முகாமையாளர் து. ரகு, யாழ். பல்கலைக் கழகக் கிளையின் முகாமையாளர் என். நாகேஸ்வரன், சுன்னாகம் வங்கிக் கிளை முகாமையாளர் எஸ். ஹென்றி ஆகிய நால்வரும் கௌரவிக்கப் பட்டனர்.

மக்கள் வங்கியின் தலைவர் லால் நாணயக்காராவினால் இம் முகாமையாளர்களுக்கு நினைவு விருதுகளும் பாராட்டுக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

மக்கள் வங்கியின் பிரதேச முகாமையாளர் எம். கே. சிவபாதவிருதயர் இம் முகாமையாளர்களுக்கான விருதுகளையும் பாராட்டுக் கடிதங்களையும் வழங்கி வைத்தார். (உ-77)

# அமைச்சர்கள் புரியும் ஊழல்களை விசாரிக்க பிரதமர் குழு அமைப்பு

(கொழும்பு)

குறிப்பிட்டசில அமைசசர்களுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கென பிரதமர் ரணில்விக்கிரமசிங்க உயாமட்டக்குழுவொன்றை நியமிததுளளார்.

ஸ்ரீகோத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இதற்கானகுழு நியமிக்கப்பட்டது.

மின்சக்தி எரிபொருள்துறை அமைசசர் கரு ஜயசூரியவின் தலைமையில் கட்சியின்பொதுச் செயலாளர் செனத்கப்பு கொட்டுவ தவிசாளர் மலிக் சமரவிக்கிரம, தயா பெல்பொல ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இச் செயற்குழுக்கூட்டத்தில் பேசியஅமைச்சர் லக்ஸ்மன் செனிவிரத்ன, அமைச்சு மட்டங்களில் ஊழல்கள் இருப்பதாகவும் அமைச்சர்கள் மெய்ப்பாது காவலர்கள் புடைசூழ மக்கள் முன்செல்வதை மக்கள் விரும்புவதில்லை என்றும் குறை கூறினார்.

பொ.ஐ.மு.அமைச்சர்களின் ஊழல நடவடிக்கைகளை நாம் விமர்சித்தோம். ஜனாதிபதி குமாரதுங்க பாராமுகமாக இருந்தார். இப்பொழுது நாம் பாராமுகமாக இருந்தால் பொ.ஐ.மு.க்கு நேர்ந்த கதியே எமகது ஏற்படலாம் என்றும் அவர் எச்சரிககை விடுத்தா.

செயற்குழு உறுப்பினர் மனோ விஜயரத்ன கருத்துக் கூறுகையில்,

தாம் இரவுவிருந்துகளிலோ, சமூக வைபவங்களிலோ கலந்து கொள்ளும்போது சங்கடங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும், அமைச்சர்களின் நடத்தைகள், ஊழல்கள்பற்றி பலரும் தம்மிடம் கேள்விகள் கேட்பதாகவும். எந்தவொரு பதவியையும் வகிக்காதவரென்ற வகையில் தன்னிடம் பலரும் வெளிப்படையாக கேள்விகள்கேட்டு தொல்லை கொடுப்பதாகவும் கூட்டத்தில் தெரிவித்தார்.

இதேவேளை, அமைச்சர்களின் ஊழல்கள் பற்றி விசாரிப்பதற்கென விசாரணைக் குழு அமைத்தமைக்காக பிரதமருக்கு ஏகோபித்த பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டமை இங்கு குறிபபிடத்தக்கது. (உ)

# 'அஸ்ரா' வெற்றிக்கிண்ண துடுப்பாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பாடசாலைகளின் துடுபபாட்டச் சங்கம் அகில இலங்கை ரீதியாக நடாத்தும் 'அஸ்ரா' வெற்றிக கிண்ண 16 வயதுக்குக் கீழ்ப்பட்டோருக்கான துடுப்பாட்டப் போட்டியின் முதற் சுற்று எதிர்வரும் 9,10,11 ஆம திகதிகளில் நடைபெறவுள்ளது.

ஐந்து சுற்றுக்களாக நடைபெறவுள்ள இப்போட்டி ஜூன் 8ஆம் திகதி வரை 'லீக்' முறைப்படி இடம்பெறவுள்ளது.

இரண்டு குழுக்களாக நடைபெறவுள்ள இப்போட்டிகளில் முதலாவது குழுவில் கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயம், மானிப்பாய் இந்துக்கல்லூரி, ஸ்கந்தவரோதயாக கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி, யூனியன் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியனவும,

இரண்டாவது குழுவில் சென் ஜோன்ஸ்கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கலலூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவையும் இடம் பெறுகின்றன.

இவ்விரண்டு குழுக்களிலும் இருந்து தெரிவாகும் முதலாம், இரண்டாம் இடத்தைப்பெறும் நான்கு பாடசாலைகள் தென் பகுதிப் பாடசாலைகளுடன் போட்டியிடச்செல்லும் என்பது குறிப்பிடத்தக்கது.

இப் போட்டிகளுக்கு அனுசரணை வழங்கும் 'அஸ்ரா' நிறுவனத்தினர் வைபவ ரீதியாக நடைபெறும் முதற்சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்ள வருகை தரவிரும்புவதாக இலங்கைப் பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கத்தின் யாழ். இணைப்பாளர் அருட்சகோதரர் அன்ரனி பிரான்சிஸ் தெரிவத்துள்ளார்.

மேற்படி இலங்கைப் பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கத்தால் 'அஸ்ரா' நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இப்போட்டிகளை வழமைபோல் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம் ஒழுங்குபடுத்தி நடத்துவதுடன் 14 வயதிற்குட்பட்ட மாணவர்களின் போட்டிகளும் இம் முறைப்படியே நடைபெறும் எனவும் அப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் 22ஆம் திகதியன்று பதிவு செய்வதற்கான சகல ஆவணங்களுடனும் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கச் செயலாளர் எஸ்.சகாயராஜா ஊடாக இணைப்பாளரிடம் சென்பற்றிக் கல்லூரியில் ஒப்படைக்குமாறும் கேட்டுள்ளது. (உ)

## இராசி பலன்

07.05.2003

(சித்திரை 24,புதன்)

| | |
|---|---|
| சஷ்டி பி.இ | 1.21 வரை |
| புனர்பூசம் மு.இ | 10.22வரை |
| இராகுகாலம் - | 11.55 - 1.25 |
| சுபநேரம் - | 4.25- 5.55 |

சஷ்டி விரதம்

**மேடம்**
பயந்த சுபாவம், புதிய விடயம் அறிதல், பகைவரால் நன்மை, முயற்சி தாமதம்.

**இடபம்**
இனிய சம்பவம்,நல்ல முயற்சி, வாக்கு மேன்மை, பயணம்.

**மிதுனம்**
வாக்கு மேன்மை, தொழில் விருத்தி, அமைதிக்குறைவு, காரிய தாமதம்.

**கடகம்**
புதிய பொருள் சேர்க்கை, சிந்தனை வருத்தி, நல்லதிருப்பம், எடுத்த காரியம கைகூடும்.

**சிங்கம்**
பிரயாணம், அதிகாரம், தர்மம், சுப செலவு.

**கன்னி**
தொழில் சிந்தை பெருமையடைதல், காரியசித்தி, எதிர்பாராத நன்மை.

**துலாம்**
நல்ல செய்தி, உற்சாகம், கீழ்ப்படிவு, புதிய முயற்சி.

**விருச்சிகம்**
உடல்உழைப்பு, வயிற்றுவலி, கட்டுப்பாடு, உறவினர் சந்திப்பு.

**தனுசு**
வீண்தொல்லை, உடல்வியாதி, காரிய தடங்கல், வேலைக்கஷ்டம்.

**மகரம்**
திடீர்ப்பயணம், அபூர்வசந்திப்பு, நிலைக் கேடு, போசனசுகம்.

**கும்பம்**
தொழில் மேன்மை, மாதர் நட்பு, குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம்.

**மீனம்**
வியாபார விருத்தி, திடீர் நன்மை, காரிய தாமதம், அதிக வார்த்தை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

## தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில்- கிழக்கு அண்ணா விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட தாச்சிச்சங்கத்தின் அனுசரணையுடன் அண்ணா விளையாட்டுக கழக மைதானத்தில் நடாத்திவரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் 4வது சுற்றில் இன்று பி.ப 4.45 மணிக்கு மல்வம் ஞானப்பிரகாசர் விளையாட்டுக்கழகமும் பண்டத்தரிப்பு சாந்தவிநாயகர் விளையாட்டுக்கழகமும் பங்குபற்றவுள்ளன. (உ-10)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு தென் பெருந்துறை சதானந்த சிவன் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை வியாழக்கிழமை மு.ப. 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 10 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம் பெறவுள்ளது. (உ-10)

## உதவிப்பொலிஸ்

# அத்தியட்சகர்களாக வெளியாரை நியமிக்க முடிவு

(கொழும்பு)

உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்பதவி வெற்றிடங்களுக்கு வெளியாரைச் சேர்த்துக் கொள்வதுஎன்ற தீர்மானத்துக்கு பொலிஸ அதிகாரிகள்தரப்பில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் சங்கம் இவ்விடயத்தில் தமது நிலைப்பாடுபற்றி பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளது.

பொலிஸ் திணைக்களத்தில் 130 உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் பதவி வெற்றிடங்கள் உள்ளன. இவற்றில்சில வெற்றிடங்களுக்கு வெளியாரை நியமிப்பதென தகவல்கள் கிடைத்திருப்பதாக பொலிஸ்அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் கருத்து வெளியிடுகையில், பொலிஸ் திணைக்களத்தில் பலவருட கால சேவையை தாங்கள் கொண்டிருந்த போதிலும் வெளியார் இந்த பதவிகளுக்கு நியமிக்கப் பட்டால் அது பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அநீதிவிளைவிப்பதாக கருதப்படும்என்றார். (தி)

# பாடசாலைகளின் அபிவிருத்திக்கு 172 கோடி நிதி உதவி

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த உலக வங்கி,ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன 172 கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளன.

வடககுக் கிழக்கு மாகாணங்களில் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட 80 பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த, உலகவங்கி 100 கோடி ரூபாவை வழங்க முன்வநதுள்ளது.

பொதுக் கல்வித்திட்டத்தில் இரண்டாவதுகட்டமாக இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பாடசாலைக் கட்டடங்களைப் புனரமைதல் ,அவற்றுக்குத் தேவையான ஏனைய வசதிகளை ஏறபடுததிக் கொடுத்தல் என்பன உதவி மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கியுள்ள 72 கோடி ரூபா நிதி பாடசாலைகளின் இரண்டாம் கல்வி நடை முறைகளை புனரமைக்கப் பயன்படுத்தப் படவுள்ளது.

இதன் மூலம் பாடசாலைகளுக்கு கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன. (தி)

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒரு தலையா
உட்கோட்டம் இன்மை பெறின் – குறள்

# வலம்புரி

## எரிக்சோலின் யாழ். விஜயம்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களின் ஏற்பாட்டாளரான நோர்வே யின் விசேட தூதுவர் எரிக் சோல் ஹெய்ம் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து பாதுகாப்பு உயர் வலயம் மற்றும் மீள் குடிய மர்வு தொடர்பாக ஆராய்ந்து சென்றுள்ளார்.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய் மின் யாழ்ப்பாண விஜயம் மிகவும் இரகசியமாக இடம் பெற்றுள்ளது. யாழ்ப்பாணத் திற்கு நேற்றுக் காலை திடீர் விஜயம் செய்த எரிக்சோல் ஹெய்ம் படையதிகாரிகள் மற்றும் கண்காணிப்புக் குழு வினருடன் சந்திப்புக்களை நடத்திச் சென்றுள்ளார்.

தற்போதைய சமாதானப் பேச்சுக்கள் தேக்க நிலை அடைந்திருக்கும் வேளை யில் எரிக்சோலின் விஜயம் முக்கியத்துவம் வாய்ந்த தெனினும், யாழ். குடா நாட்டு பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள், மனிதநேய அமைப்புக்க ளுடன் சந்திப்புக்களை நடத் தாமலும், உயர் பாதுகாப்பு வலய பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்க்கின்ற மக்களின் அவல நிலைகளை அறியாமலும் தனித்து படைத் தரப்பின் ஒரு பக்க சார்பான கருத்தை கேட்டறிந்ததுடன் யாழ். விஜயத்தை எரிக் சோல் முடித்துக் கொண்டமை வியப்புக்குரிய விடயமாகும்.

சமாதானப் பேச்சுக்களில் தேக்க நிலையை ஏற்படுத்தி இருக்கும் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை படைத் தரப்போடும், விடுதலைப்புலி களோடும் மட்டும் தொடர் புடையது அல்ல அது. பொது மக்களோடும் தொடர்பு பட்ட பிரச்சினை ஆகும். எனவே இது விடயத்தில் பொதுமக்களின் கருத்தை அறிவது மிகவும் தேவை யான தொன்றாகும்.

வடபுலத்து மக்களின் தாயகத்தில் உயர் பாது காப்பு வலயங்களை அமைத்து அப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை மீளவும் குடியமர்த்த மறுக்கும் பிரச் சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். ஆனால் உயர் பாதுகாப்பு வலய விடயத் தில் இராணுவம் மட்டும் தனித்து முடிவெடுக்க முடி யாது. இங்கு பொதுமக்கள் என்ற தரப்பினர் விலக்க முடியாத இடத்தில் உள்ள னர். இந்நிலையில் யாழ்ப்பா ணத்திற்கு நேற்று விஜயம் செய்த எரிக் சோல்ஹெய்ம் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினை களை பொதுமக்களிடம் நேரடியாக கேட்டு அறிந்து கொள்ளாமை அவரின் யாழ். விஜயம் ஏதோ ஒரு வகை யிலான கடன்கழிப்பு என்றே கூறவேண்டும். இத்தகைய செயற்பாடுகள் உண்மை நிலையை வெளிப்படுத்துவ தற்கு எவ் வகையிலும் உத வப்போவதில்லை.

# 20 வருட போர் காரணமாக சுமார் ஒரு இலட்சம் வீடுகள் சேதம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த இருபது வருடங்களில் இடம் பெற்ற போர் நடவடிக்கைகள் காரணமாக மொத்தமாக ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 546 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இத் தொகையில், 24 ஆயி ரத்து 331 நிரந்தர வீடுகள் முற் றாகச் சேதமடைந்துள்ளதுடன் 41 ஆயிரத்து 459 நிரந்தர வீடுகள் பகுதியாகச் சேதமடைந்துள்ளன.

அதே சமயம் அரை நிரந்தர வீடுகளில் 13 ஆயிரத்து 200 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்தும் 13ஆயிரத்து 439 வீடுகள் பகுதி யாகச் சேதமடைந்தும் உள்ளன.

இது இவ் விதமிருக்க 19ஆயிரத்து 917 குடிசை வீடுகள் முழுமையா கச் சேதமடைந்தும் ஆயிரத்து 200 குடிசைகள் பகுதியாகச் சேதமடைந் துள்ளன.

மொத்தமாகச் சேதமடைந்த ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 546 வீடு களுள் அதியுயர் பாதுகாப்பு வலயத் தினுள் உள்ள வீடுகள் பற்றிய பாதிப்பு விபரங்கள் திரட்டப்படவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 1981ல் திரட்டப்பட்ட குடிசனத்தொகை மதிப் பீட்டின் அடிப்படையில் ஒரு இலட் சத்து 66 ஆயிரத்து 85 வீடுகள இருந் துள்ளன எனவும் அத் தொகையில் 89,532 வீடுகள் நிரந்தர கட் டடங்களாகவும் 55ஆயிரத்து 532 வீடுகள் அரை நிரந்தர வீடுகளாக வும் அமைந்திருந்தன என அறியப் படுகின்றது. (உ-77)

## உறவுப்பால நிகழ்வு

# இரத்தினபுரி இளைஞர்கள் இடைக்குறிச்சி வருகை

(தென்மராட்சி)

யாழ். மாவட்ட சர்வோதய இயக் கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும்10, 11,12ஆம் திகதிகளில் இடைக்குறிச்சி கிராமத்தில் வடக்கு தெற்கு உறவுப் பால நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பங்குகொள்ளும் பொருட்டு இரத்தினபுரியில் இருந்து 50 இளைஞர், யுவதிகள் இடைக் குறிச்சிக்கு வருகை தருகின்றனர்.

சர்வோதய இயக்கத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளர் க.கனகரத் தினம் தலைமையில் நடைபெற வுள்ள இந்நிகழ்வில், தலைமைக் காரியாலயத்தின் காந்திசேனத் திட்டத்தின் பணிப்பாளர் ரவீந் திரகந்தகே பங்கு கொள்கின்றார்.

இங்கு சிரமதானப் பணிகள், கலை கலாசார நிகழ்ச்சிகள் மற் றும் சமாதானம் பற்றிய கலந்து ரையாடலும் இடம்பெறவுள்ளது..

தென்மராட்சிப் பிரதேசசெயலர் கே.கேதீஸ்வரன் தமிழீழவிடு தலைப்புலிகளின் அரசியல் துறை யைச்சேர்ந்த மாறன் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாக பங்கு கொள்ளவுள்ளனர். (உ-77)

# உயர்பாதுகாப்பு வலயங்களை மூதூரிலும் ஆரம்பிக்க வேண்டும்

## முஸ்லிம் லீக் கோரிக்கை

(கொழும்பு)

மூதூரிலும்,கிண்ணியாவிலும் உட னடியாக அரசாங்கம் உயர் பாது காப்பு வலயங்களை ஆரம்பிக்க வேண்டும். முஸ்லிம்களையும், சிங் களவர்களையும் புலிகளிடமிருந்து பாதுகாக்க வேண்டும். இவ்வாறு அகில இலங்கை முஸ்லிம் லீக் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத் துள்ளது.

அத்துடன் இப்போதிருக்கும் உயர் பாதுகாப்பு வலயங்களைப் பலப் படுத்த வேண்டும் என்றும் புலிகள் தமது ஆயுதங்களை அரசாங்கத் திடம் கையளிக்கும் வரையும், அதேவேளை முழுமையான சமாதா னம் ஏற்படும் வரையும் இது நடை பெற வேண்டுமென்றும் அவ்வமைப்பு கேட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை லீக்கின் மத்திய குழுக்கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மூதூர் தொகுதியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உயர் பாதுகாப்பு வலயங்களை அரசாங்கம பேணத்தவறியதாலேயே மூதூரில் கலவரங்கள் வெடித்தன என்றும் அதுவே பின்னர் ஏனைய பகுதிகளுக்கும் பரவியதென்றும் தீர்மானததில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# 4மில்லியன் முத்திரைகள் விடுவிக்கப்படாது முடக்கம்

(கொழும்பு)

முன்னைய பொ.ஐ.மு. அரசினால் பிரமுகர்கள் நால்வரைக் கௌரவப் படுத்த வெளியிடப்பட்ட முத்திரை கள் ஒன்றரை வருடங்களாக விடு விக்கப்படாது வைக்கப்பட்டுள்ள தாக தெரியவந்துள்ளது.

ஒவ்வொரு முத்திரையும் ஒரு மில லியன் வெளியடப்பட்டு விற்பனைக்கு விடப்படாது தற்போது வருமான வரிததுறை திணைக்களத்தில் வைக்கப் படுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. முத்திரை சேகரிப்பாளர் ஒரு வர் மேற்கொண்ட முயற்சியினால் இது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

வெளியிடப்பட்ட இம் முத்தி ரைகளில் ஒன்றையேனும் பெறமுடி யாமல் இருந்ததாக அந்த முத்திரை சேகரிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இம் முத்திரைகள் மாபாலகம விபுலசார தேரர், மைத்திரிபால சேனநாயக்க,எம்.ஜி. மெண்டிஸ், சி. சிற்றம்பலம் ஆகியோரை கௌரவிக்க வெளியிடப்பட்டவை. இவை ரூபா 3.50 பெறுமதி கொண்டவை.

மக்கள் தொடர்பாடல் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் காலிம் அஸீஸ் இது தமது அமைச்சைச் சார்ந் ததல்ல என்றும், முத்திரைகளை வழங்குவதற்கென உள்ள குழுவின் பொறுப்பு இது என்றும் தெரிவித்துள் ளார்.

இருந்த போதும்,இது பொ.ஐ.மு. ஆட்சிக்காலத்தில் நடைபெற்றது என்பதால் தம்மை இதில் பொறுப் பாளிகளாக்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இது பொ.ஐ.மு. வெளியிட்ட முத்திரைகள் என்பதால தற்போதைய அரசு அதை வெளி யிடுவதில் வேண்டுமென்றே தாமதம் காட்டுகிறது என்றும் குற்றச்சாட்டு கள் எழுந்துள்ளன. (உ)

## தினசரி தியானம்

### சாதனையின் பயன்கள்

சாதனை எனப்படும் ஆன்மீகப் பயிற்சிகள் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் அக வாழ்க்கையை உள்ளாய்வு செய்யும் அகப்பார்வையையும் கலங்காத மனத்தையும் தரக்கூடியவை. நீங்கள் புதிய உள்ளத்தையும், பார்வையையும் பெறுவீர்கள். உங்களது உயிரில் புலகாங்கிதம் தரும் ஓர் ஆன்மீக மின்னோட்டம் கடந்து செல்லும். ஓர் ஆன்மீகப் பேரின்பச் அலை உங்களை மோதிச் செல்லும். நீங்கள் உண்மை அல்லது மேலான பொருள்களில் காட்சியைப் பெற்று முழு வாழ்க்கையை எய்திவிடலாம். இந்த உள்ளார்ந்த சாதனப் பயன்களின் பெருமைகளை விளக்கச் சொற்களே இல்லை.

சுவாமி சிவானந்தர்

## விடார் ஹெல்கிசன் நோர்வே பயணம

(கொழும்பு)

நோர்வேயின் பிரதி வெளிவிவ கார அமைச்சர் விடார் ஹெல்கிசன் நேற்று முன்தினம் இரவு நோர்வே பயணமாகியுள்ளார்.

இலங்கையின் சமாதான முயற் சிகளில் ஏற்பட்டிருக்கின்ற தற்காலி கமான பின்னடைவு குறித்து ஆராய் வதற்காக கொழும்பு வந்திருந்த ஹெல்கிசன், கட்டுநாயக்க விமான நிலையத்தில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் நேற்று முனதினம் காலை பேச்சு நடத் தியிருந்தார்.

மேலும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடனும் இவர் பேச்சு நடத் தியிருந்தார்.

இந் நிலையில் வன்னிக்கான தனது விஜயத்தை ரத்துச் செய்து விட்டு அவர் நேற்று முன்தின மிரவே நோர்வேக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார். (இ)

# இந்துக் குருமார்களுக்கு பதக்கம் வழங்கி கௌரவம்

(கொழும்பு)

இரண்டாம் உலக இந்து மாநாட் டின் மூன்றாம் நாள் நிகழ்வு கடந்த ஞாயிறன்று கொழும்பு காலி முகத் திடலில் நடை பெற்றபோது, இலங்கை யின் புகழ்பூத்த மூத்த இந்து குருமா களுக்கு இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஞாப கார்த்த சின்னம், தங்கப்பதக்கம் என்பன அணிவித்துக் கௌரவித் தார்.

இவ்வாறு கௌரவம் பெற்ற இந்து குருமார் விவரம் வருமாறு, பிரம்மஸ்ரீ பி. சண்முகரட்ண சர்மா,சிவஸ்ரீ எஸ். குஞ்சிதபாதக் குருக் கள், இந்து மதகுரு பீடாதிபதி சிவஸ்ரீ எஸ். மகேஸ்வரக்குருக்கள, சிவஸ்ரீ மு. பரமசாமி குருக்கள் (கோப்பாய்), சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் (கீரிமலை), பிரம்மஸ்ரீ க.பஞ்சாட்சரசர்மா(கோப்பாய்),சிவஸ்ரீ து. சுந்தரமூர்த்தி குருக்கள் (மாவிட்ட புரம்), சிவஸ்ரீ எஸ். சிதம்பரநாதக் குருக்கள் (திருக்கணித பஞ்சாங்கம்) கைதடி, பிரம்மஸ்ரீ து. சந்திரசேகர குருக்கள், சிவஸ்ரீ ந. சோமஸ்கந்தக் குருக்கள், சிவஸ்ரீ எஸ். சந்திரசேகர குருக்கள்,சிவஸ்ரீ சோ. ரவிச்சந்திர குருக்கள் ஆகியோரே கௌரவிக்கப் பட்டனர். (உ)

# அரசாங்கப் பாடசாலைகளை அரசியலுக்கு பயன்படுத்துவதில்லை

## வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னிப்பிரதேசத்தில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளை அரசியல நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப் போவதில்லை என தமிழீழ விடு தலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் தெரிவித்ததாக வன்னிப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. எம். தர்மரட்ண தெரிவித்துள்ளார்.

வவுனியா யுத்த நிறுத்தக் கண் காணிப்புக்குழு அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் எழிலன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் கண்காணிப் புக்குழுவின் பிரதிநிதிகள் வன்னிப் பிராந்திய பாதுகாப்புக்குழுவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில்சந்திரபால, பிரதித் தளபதி மேஜர் ஜெனரல் நந்தமல்ல வாராட்சி, வவுனியா மாவட்பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யூ. எம்.தர்மரட்ண,தமிழீழ விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் எழிலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (தி)

# பாலாவின் கடிதம் குறித்து பாராளுமன்றத்தில் விவாதம்

## நடத்துமாறு மகிந்த கோரிக்கை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவினால் பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் பேச்சுக்களில் இருந்து தற்காலிகமாக இடை வில குவது தொடர்பான கடிதம் பற்றி விவாதம் ஒன்று நடத்துவதற்கு நாள் ஒதுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கேட் டுள்ளார்.

பாராளுமன்றத்தில தொடர்ந்து பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அண்மையில் ஈ.பி.டி.பி உறுப்பி னர்கள் மற்றும் இராணுவப் புல னாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் கொல்லப்பட்டமை மற்றும் ஏனைய அசம்பாவிதங்கள் குறித்து நான் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேவேளை முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை 3 மாத காலங்கள் பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்காமல் இருக்க அனுமதி கோரும் யோசனை ஒன்றும் அங்கு நிறைவேற்றப்பட்டது. (பி)

## 30 குடும்பங்கள் குடாநாடு திரும்புகின்றன

(யாழ்ப்பாணம்)

சுய விருப்பில் மீளக் குடியமரும் பொருட்டு 30 குடும்பங்களைச் சேர்ந்த 161பேர் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்குடா நாட்டிற்கு வருகை தரவுள்ளனர்.

வவுனியா நலன்புரி நிலையங் களில் தங்கியிருந்தவர்களே இவ்விதம் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பவுள்ளனர். (உ)

## முதியோர் அ.அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

முதியோர் அடையாள அட்டை பெறுவதற்காக கடந்த மாதம் 17, 18 ஆம் திகதிகளில் யாழ்வேம்படி உயர்தரப் பாடசாலையில் விண்ணப் பம் செய்தவர்களுக்கான முதியோர் அடையாள அட்டைகள் எதிர் வரும் 12ஆம் திகதி திங்கட் கிழமை மு.ப 10 மணிக்கு யாழ். பிரதேச செயலக சமூகசேவைப் பிரிவில் வைத்து வழங்கப்படவுள்ளன. (உ)

### பிராந்திய இந்து மாநாட்டில் பங்குபற்ற

# தமிழக பேராளர்கள் 40 பேர் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

2வது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு கொழும்பிற்கு வருகை தந்த தமிழகப் பேச்சாளர்களை உள்ளடக்கிய 40 பேராளர்கள் நேற்று நல்லை ஆதீனம், குருகுலம் மற்றும் பனை அபிவிருத்திச் சபை விடுதி ஆகியவற்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள தமிழகப் பேராளர்களை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் 2வது உலக இந்து மாநாட்டையொட்டிய சிறப்பு நிகழ்வுகளில் சொற்பொழிவு ஆற்றுவதற்கு அழைக்கலாம் எனவும் அவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகளை இந்துகலாசார அமைச்சு மேற்கொள்ளுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ந-5)

# மேற்பார்வைக் குழு யாழ்ப்பாணம் வருகிறது

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் இருந்து வருகை தரும் அதிகாரிகள் குழு இம் மாதம் 12ம் திகதி தீவக வலயத்திலும் 13ம் திகதி வடமராட்சி வலயத்திலும் பாடசாலைகளை மேற்பார்வை செய்வதுடன் மேற்படி வலயக் கல்வி அலுவலர்களையும் சந்திக்கவுள்ளது.

இக் குழு தொடர்ந்து 14ம் திகதி வலிகாமம் இராமநாதன் கல்லூரியிலும் 15ம் திகதி வடமராட்சி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் 16ம் திகதி .தென்மராட்சி சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் அந்தந்த கல்வி வலய அலுவலர்களையும் பாடசாலை அதிபர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளதுடன் இம் மாதம் 17ம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் தீவக வலய அதிபர்கள் அலுவலர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளது.

தினமும் மு.ப. 9மணிக்கு ஆரம்பிக்கும் இக் கலந்துரையாடல்களிற்கு வருகை தருபவர்கள் குணநல உள்ளீடு ஆவணங்கள் செயலாற்றுகை தரங்கணிப்பு, 2003ம் ஆண்டிற்கான பாடசாலை மட்டக் கணிப்பீடு, வருடாந்த அமுலாக்கல் திட்டம், வருடாந்த விபரத் திரட்டு, பொருள் கணக்கெடுப்பு பாடசாலையில் ஏற்பட்ட இழப்புகள், சேவை நீடிப்பு பதவியுயர்வு மற்றும் ஓய்வூதியம் தொடர்பான அனைத்து கையேடுகள், ஆவணங்கள் ஆகியவற்றை கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (உ-4)

## வெடிபொருள் மீட்பு

வல்வெட்டித்துறை ஊறணிப் பகுதியில் இழைப்படகு ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

ஊறணிப்பகுதியிலுள்ள ஆலயவளவு ஒன்றினுள் கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த இழைப்படகினுள் இருந்த வெடிபொருட்கள், பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் கண்காணிப்புக் குழு முன்னிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டது (த-63)

### சீநோர்...

பட்டமை சம்பந்தமாகவும் புனரமைப்பு வேலைகளுக்கு படையினர் அனுமதி வழங்காதது குறித்தும் புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அக்கடிதத்திற்கு பதில் அளிக்கும் முகமாக அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்படி தொழிற்சாலையை புனரமைப்பதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்துள்ளார். (த)

### இயல்பு...

தனது பாதுகாப்பு அறிக்கையுடன் நேற்று இலங்கைக்கு வந்துள்ளார்.

சதீஸ் நம்பியார் தனது அறிக்கை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவையும் சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் கடற்படைக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள சிக்கல்களை தவிர்ப்பதற்கு யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழு தயாரித்துள்ள அறிக்கையின் பின்னணியில் வைஸ் அட்மிரல் பி.ஜே. ஜேக்கப்பன் ஆலோசனை பெறப்படவுள்ளது.

யாழ். குடாநாட்டில் இயல்பு நிலையை தோற்றுவிப்பதற்கும், உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும் இந்தியப் படைத்துறை நிபுணர்களிடம் இருந்து ஆலோசனைகள் பெறப்படவுள்ளது. யாழ். நகரில் உள்ள சுபாஸ், ஞானம்ஸ் விடுதிகளில் உள்ள இராணுவத்தினர் வேறு இடங்களிற்கு இடமாற்றம் செய்யப்படுவதனால் பலாலி உயர் பாதுகாப்பு வலயத்திற்கு எந்தவித அச்சுறுத்தல்களும் இடம்பெறமாட்டாது. அந்த முகாம் யாழ். நகருக்குள்ளேயே இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பிக்கப்படமாட்டாது. விடுதலைப்புலிகளும் நிரந்தர சமாதானத்தையே விரும்புவதாக அன்ரன் பாலசிங்கம் அறிவித்துள்ளார் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். (வ-தி)

### தூதுவர்...

தூதரகத்தைச் சேர்ந்த தோமஸ் மற்றும் மிஸ்பிரீசர் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

எரிக் சோல்ஹெய்ம் இன்று யாழ்ப்பாணம் வருவார் என வலம்புரி நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

பலாலி வீதியில்
திருநெல்வேலிச் சந்தியில்
குகன் எரிபொருள் விற்பனவு நிலையம்
காலை 5மணி தொடக்கம் இரவு 9மணி வரை கட்டுப்பாட்டு விலையில் டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய், ஒயில் வகைகள் பெற்றுக்கொள்ளலாம். (C/6100)

# மாலைதீவு ஜனாதிபதி நேற்றுக் கொழும்பு வருகை

(கொழும்பு)

மாலைதீவு ஜனாதிபதி முகமட் அப்துல் கையூம் நேற்று கொழும்பு வந்தடைந்தார். ஜனாதிபதியையும் அவரது பாரியாரையும் ஏற்றிவந்த எமரேட்ஸ் எயாவைஸ் விமானம் நேற்று பிற்பகல் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது பாரியார் மைத்திரி விக்கிரமசிங்க, அமைச்சர்கள் டிரோன் பெர்னான் டோ, இம்தியாஸ்பார்க்கீர் மாக்கார், பிரதம மந்திரியின் செயலாளர் பிட்மன் வீரக்கோன்,வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நிஹால் றொட்ரிக்கோ ஆகியோர் விமான நிலையத்தில் வைத்து மாலைதீவு ஜனாதிபதியையும் அவரது பாரியாரையும் வரவேற்றனர்.

இராணுவத்தளபதி லயனல் பலகல்ல தலைமையில் மாலைதீவு ஜனாதிபதிக்கு அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டதோடு .21 துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன, பின்னர் விருந்தினர் பதிவேட்டில் கையொப்பமிட்டபின் கொழும்பு நோக்கி பயணமானார். (ந-5)


## கேள்வி அறிவித்தல்

### முல்லைத்தீவு வைத்தியசாலையில் 48 படுக்கைகள் கொண்ட வாட் (இரண்டு மாடிகள்) மீள் நிர்மாணித்தல்

01. வடக்கு கிழக்கு மாகாண, பிரதம செயலாளர் செயலகத்தில் ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபைத் தலைவரினால் முல்லைத்தீவு வைத்தியசாலையில் 48படுக்கைகள் கொண்ட வாட் (இரண்டு மாடிகள்) மீள்நிர்மாணிப்பதற்கான கேள்விகள் 2003ம் ஆண்டு யூன் மாதம் 02ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, பெறப்பட்ட கேள்விகள் இச் செயலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

02. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-5 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரும் தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தில் (NCCASI) அங்கத்தவராக உள்ளோரும் மாத்திரம் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவார்.

03. ஒப்பந்த பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கிளிநொச்சி மாகாணக் கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா1000/= செலுத்திப்பெற்றுக்கொள்ளப்பட்டபொது 172 பற்றுச்சீட்டை முல்லைத்தீவு மாகாண கட்டடங்கள் திணைககள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமிடத்து 2003ம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி தொடக்கம் 2003ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை அலுவலக நேரங்களில கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.

06. கேள்விஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம். அத்துடன் ஏதும் மேலதிக விபரங்களை முல்லைத்தீவு மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்
ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபை

பிரதம செயலாளர் செயலகம்,
வடக்கு-கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை,
திகதி:03.05.2003.

(C/6110)



## கேள்வி அறிவித்தல்

### ஐஸ் உற்பத்தி செய்வதற்கான கட்டடங்கள் நிர்மாணித்தல்

### வடக்கு - கிழக்கு மாகாணம்

01. வடக்கு கிழக்கு மாகாண, பிரதம செயலாளர் செயலகததில் ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபைத் தலைவரினால் ஐஸ் உற்பத்தி செய்வதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கான கேள்விகள் 2003ம் ஆண்டு யூன் மாதம் 02ம் திகதி பிற்பகல் 3.00மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, பெறப்பட்ட கேள்விகள் இச் செயலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

02. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-6 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரும் தேசிய நிர்மாண சங்கத்தில் (NCASL) அங்கத்தவராக உள்ளோரும் மாத்திரம் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவார்.

03. ஒப்பந்த பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளில் விபரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. சம்மந்தப்பட்ட மாகாணக் கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா-1000/= செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பொது172 பற்றுச்சீட்டை சம்மந்தப்பட்ட மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமிடத்து, 2003ம் ஆண்டு மே மாதம் 17ம் திகதி தொடக்கம் 2003ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் திகதி பிற்பகல்3.00 மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை**

| இலக்கம் | இடம் | மாவட்டம் | நிறைவேற்று எந்திரி அலுவலகம் | பிரதம எந்திரி அலுவலகம் |
|---|---|---|---|---|
| 01 | மருதங்கேணி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 02 | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | கிளிநொச்சி |
| 03 | திருக்கோவில் | அம்பாறை | கல்முனை | அம்பாறை |
| 04 | சாய்ந்தமருது | அம்பாறை | கல்முனை | அம்பாறை |

05 கேள்வி கோருபவர் ஒருவருக்கு, ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.

06 கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம். அத்துடன் ஏதும் மேலதிக விபரங்களை சம்மந்தப்பட்ட மாகாணக் கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடம் இருந்து வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்
ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபை

பிரதம செயலாளர் செயலகம்,
வடக்கு-கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை,
திகதி:05.05.2003.

(C6109)



German Technical Co- operation

**Capacity Building for School Development societies**

**GTZ -International Service of Asia-Jaffna Rehabilitation joint program funded by European Union**

## Vacancy for Field Officer

Applications are invited form suitably qualified graduates for capacity building of School development Societies of school which are rehabilitated by GTZ-International Service Asia.

**Responsibilities**

- Organising and conducting workshops
- Analysing the strengths and weakness of existing SDS
- Co-ordinating with the Department of Education and respec tive schools
- Facilitating the SDS and students to promote their leadership skills.
- Reporting the progress to social mobilisation Unit of GTZ-JRP
- Identify and motivate suitable persons to carry out sustainable activities

**Qualification**

- Degree from the University or equivalent qualification.
- Previous experience in participatory approach in the NGO sector.
- Good Interpersonal communication skills
- Skills in situation analysis.
- Able to prepare reports and documents in English.
- Able to ride a motor bike with licence.

**Employment Duration: Three months.**

Please forward your application on or before 18th May 2003. To:

Socil Mobilisation Unit
GTZ-JRP
472,Main Street
Jaffna

(C/6111)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.